பொதுசன நூலகம்
18 SEP 2004

Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-02 | 18-09-2004 | சனிக்கிழமை | ஓசை -213




உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். (சி-10163) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சிறிலங்கா இராணுவம் தமிழ்க்குழுக்களுடன் இணைந்து செயற்படுவதை நிறுத்த வேண்டும்

## நோர்வே சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)



**சிறிலங்கா இராணுவம் தமிழ்க்குழுக்களுடன் இணைந்து செயற்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளார். நேற்றுமாலை கொழும்பிலுள்ள நோர்வேத் தூரகத்தில் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

சூல்ஹெய்ம் நேற்று, தினக் குரல் மற்றும் சுடாஒளி சிங்களப் பத்திரிகைகளான லங்காதீப,லக்பிம போன்றவற்றின் ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினார்.இதன் போது சமாதானம் தொடர்பான ஊடகங்களின் கருத்துக்களை சூல்ஹெய்ம் கேட்டறிந்துகொண்டார். இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் மிகவும் குறைவாகவே காணப்படுவதாகக் கூறிய அவர். ஜே.வி.பியுடன் தாம் சந்திப்பு ஒன்றை நடத்த விரும்பிய போதும் அது நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார். ஆயுதம் தாங்கிய துணைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடு பிளவடைவதைத் தடுக்க இ.நி.ச.குறித்துப் பேசவேண்டும்

## -யாழ். ஊடகவியலாளர் அறிவுறுத்து

இலங்கை இருநாடுகளாகப் பிளவடைவதைத்தடுக்க வேண்டுமாகவிருந்தால் சிறிலங்கா அரசில் அங்கத்துவம் வகிக்கும் பேரினவாதக்கட்சிகள் தமது இனவாதக் கொள்கைகளைக் கைவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சு வார்த்தைகளைத் தொடரமுன் வரவேண்டும்.

இவ்வாறு யாழ்.குடாநாட்டு ஊடகத்துறை அமைப்புக்கள் மற்றும் குடாநாட்டு ஊடக வியலாளர்கள் இணைந்து ஒரு மித்த குரலில் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்று சமாதானம் தொடர்பான மக்களின் கருத்துக்களை அறிவதற்காக யாழ்குடாநாட்டிற்கு வருகை தந்த தென்னிலங்கையின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர் அமைப்பின் பிரதிநிதிகளை யாழ்.நகரில் உள்ள "சிற்றி ஹோலில்" வைத்துச் சந்தித்த போதே குடாநாட்டு ஊடகவியலாளர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ந்து தமிழ் மக்களின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் துறைப்பொறுப்பாளர் கனேடியத் தூதுவர் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலேரியாரேமன் எதிர் வரும 20ஆம் திகதி அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இச்சந்திப்பு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் மு.ப.11.00 மணியளவில் இடம் பெறவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (தீ.லோ)

# மட்டு.இல் புலிகள்-படையினர் புதனன்று சந்திக்க ஏற்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் -சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற வேண்டிய உத்தேச சந்திப்பு எதிர் வரும் புதன்கிழமையன்று நடைபெறவிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் போராளிகள் மீதான திட்டமிட்ட தாக்குதல் சம்பவங்களையடுத்து இத்தகைய சந்திப்புகளிலிருந்து கடந்த யூன் மாதம் முதல் விடுதலைப்புலிகள் விலகிக்கொண்டார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கை ஊடகவியலாளர் இளம்பரிதி யாழ்.இல் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை ஊடகவிலாளர் களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம் பரிதிக்கும் இடையேயான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் கடந்த கால யுதத்தினால் பாதிப்புற்ற வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளை மையமாகக் கொண்டவை என யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் விளக்கம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்டம் பிற்போடப்படலாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் திகதி சிலதினங்களால் பின்தள்ளிவைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக் கீடுகள் செய்யப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கான காரணமாகும்.

இதேவேளை வரவு செலவு திட்ட விவாதத் தினங்களும் குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் எவ்வாறான பலத்துடன் இருந்தனரோ அதுபோன்றே இன்றும் இருக்கின்றனர்

## -யு.என்.டி.பீ அலுவலர்களிடம் யாழ். வெகுசன அமைப்புகள் தெரிவிப்பு

புலிகள் முன்பு எவ்வாறான இராணுவப் பலத்துடன் இருந்தார்களோ அதேபோன்று தான் இன்றும் இருக்கின்றார்கள். சில வேளைகளில் அவர்களது இராணுவப் பலம் மேலும் வலுப்பட்டிருக்கலாம். இதனை கருத்தில் எடுத்துச் சமாதான வழியில் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தி நிரந்தரத் தீர்வொன்றினை எட்ட இலங்கை அரசு முன்வரவேண்டுமென யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடாநாட்டில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவென வருகை தந்திருந்த அவ் அமைப்பின் ஆலோசகர்களுடனான சந்திப்பிலேயே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

பளைப்பகுதியில் நேற்று முன்தினம் தவறுதலான விபத்தொன்றின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். கப்டன் இளங்கோவன் (துப்பையயா-குகநாதன், 07ஆம் வாய்க்கால், கிளிநொச்சி) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

மக்கள் அனைவரும்
எழுச்சியடைவார்களாயின் தமிழீழம்
உருவாகுவதை யாராலும்
தடுக்கமுடியாது.

**தியாகி லெப்.கேணல் திலீபன்**




# வீரவணக்கக் கூட்டமும் வித்துடல் விதைப்பும்

கடந்த 14.09.2004 அன்று முல்லை மாவட்டம் முத்துஐயன்கட்டுப் பகுதியில் தவறுதலான விபத்தின் போது சாவடைந்த வீரவேங்கை அன்புச்சிட்டு (ஆனந்தராசா அஜிந்தா, யாழ்.மாவட்டம்) எனும் மாவீரரின் வித்துடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மண்டபத்துக்கு பாண்ட்வாத்திய இசை அணிவகுப்புடன் எடுத்து வரப்பட்டு, சங்கானைப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளரும் சங்கானை சிவப்பிரகாசப் பாடசாலை அதிபருமாகிய கைலாசநாதன் தலைமையில் வீரவணக்கக் கூட்டம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சுப்பையா வேலு என்பவரின் குடும்ப அட்டை, பாஸ், காணி உறுதி, போட்டோஸ்ரப் என்பன 13.09.2004 அன்றுமுல்லைத்தீவு பொதுச்சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம்பணிமனையிலோ அல்லது முல்லைத்தீவு காவல் பணிமனையிலோ ஒப்படைக்கவும். (சி-9196)

### பிற்போடல்

15.09.2004 அன்று நடைபெற விருந்த பூநகரி பிரதேசசெயலகப் பகுதி நாட் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 22.09.2004 அன்று புதன் 10.00 மணிக்கு நடைபெறும் என்பதனை அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகளுக்கும், உள்ளூர் திணைக்களத் தலைவர்களிற்கும் நிர்வாக உத்தியோகத்தர் இ.இராசன் அறியத்தருகிறார். (34)

# திருமலையில் 15 கலைஞர்களை கௌரவிப்பதற்கு ஏற்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் பல கிராமங்களில் இலை மறைகாயாக இருந்து கலைத் தொண்டு புரிந்து வரும் 15 கலைஞர்களை, திருகோணமலை சூப்பர் சங்கீத இசைக்கலையகம் தனது 15ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கௌரவிக்கவிருக்கின்றது.

இக் கௌரவிப்பு நிகழ்வு செப்ரெம்பர் 26ஆம் திகதி திருகோணமலை சென் யோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. கழகத் தலைவர் எஸ்.டொமினிக் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடக்குக் கிழக்குமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற் றும் இளைஞர் விவகார அமைச் சின் செயலாளர் இ.தியாகலிங்கம் பங்குபற்றுகின்றார். சிறப்பு அதி தியாக திருமலைப்பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் எஸ்.அருமைநாயகம் கலந்துகொள் கின்றார்.

கௌரவிக்கப்படவிருக்கும் கலைஞர்களின் பெயர்கள் வருமாறு; எஸ்.இரத்தினசிங்கம், (நாடகத்துறை)- சேனையூர், முகமட்ஜபார் (இசைத்துறை- பாடகர்) மூதூர், ரி. லோகிதராசா (இசைத்துறை- வாத்தியக் கலைஞர்) கங்குவேலி, ஜேம்ஸ் ராகல் (இசைத்துறை- வாத்தியக் கலைஞர்) திருமலை, எம்.ஜேசுதாசன் (இசைத்துறை- வாத்தியக் கலைஞர்) திருமலை, ஜே.ஆர் அலெக்ஸாண்டர் (பாடகர், திருமலை, திருமதி றெஜினா பத்தியூஸ், (பாடகர்) திருமலை, கே.சடாட்சரம் (வாத்தியக் கலைஞர்)திருமலை, எஸ் ஜெயராஜ்பாய்வா (கவிதையரங்கம்) மூதூர், ஏ.எப் சேவியர் (வாத்தியக்கலைஞா) மூதூர், கே.சண்முகராசா (மிரு தங்கம்) தம்பலகமம், எஸ். துரை சிங்கம் (போர்க்கலைத்துறை) திரு மலை, எஸ்.கிறிஸ்ரொபர் (சித்திரக் கலை) திருமலை, பிரோசைட் (கட்டுரையாளர்) திருமலை, புலவர் கனகரட்ணம் (கவிதை) சாலையூர். (25)

# தியாகதீபம் திலீபன் நினைவாக விசுவமடுவில் சிரமதான நிகழ்வு

தியாகதீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவையொட்டி விசுவமடுப்பிரதேசத்தில் பல இடங்களில் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. விசுவமடு மேற்கு சேமிப்புக்கடன் குழு உறுப்பினர்கள், கிளி/மாவட்ட பெண்கள் மேம்பாட்டுத் தலைவி திருமதி.காசிநாதன் தலைமையில் விசுவமடு மாவீரர் மண்டப வளாகத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். இதேவேளை புன்னைநீராவி உப்புக்குளம், பகுதி வீதி, ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், என்பன அப்பகுதிமக்களால் கிராம சேவகரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது. உழவனூர் தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை வளவு, கறுக்காய்குளத்துக்குச் செல்லும் கால்வாய் என்பனவும் சிரமதானம்மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (14)

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு திருமலையில் சித்தரப்போட்டி

(திருகோணமலை)

உலக சிறுவர் தினத்தையொட்டி திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களில் உள்ள சிறுவர், சிறுமியர் மத்தியில் சித்திரப் போட்டியை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய அலுவலகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை திருகோணமலை நகர மண்டபத்தில் நடத்துகின்றது.

"இடம்பெயர்ந்த மக்களின் உணர்ச்சித்துடிப்பு" என்ற தலைப்பில் இச்சித்திரப்போட்டி நடத்தப் படுவதாக மனித உரிமை ஆணைக் குழுவின் திருகோணமலைப் பிராந்திய இணைப்பாளர் திருமதி மதியாபரணம் தெரிவித்தார்

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் சிறுவர் சிறுமியரின் உணர்வலைகள் இச்சித்திரப் போட்டியின் மூலம் வெளிப்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் அலஸ் தோட்டம், நிலாவெளி, ஜமாலியா, கிண்ணியா, உப்பாறு, மொறவேவா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் பலவருடங்களாக வாழ்ந்து வருகின்றன. இக் குடும்பங்களின் பிள்ளைகள் மத்தியில் பூர்வாங்க சித்திரப் போட்டி நடத்தப்பட்டது. அதில் சிறந்த சித்திரங்களைத் தீட்டிய சிறுவர், சிறுமியரே நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் சித்திரப்போட்டியில் பங்குபற்றுவர் என்றும் இதில் தெரிவுசெய்யப்படும் சிறுவர், சிறுமியரின் சித்திரங்கள் ஒக்டோபர் முதலாம் திகதி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் உலக சிறுவர் தினத்தையொட்டி நடத்தப்படும் சித்திரக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் மனித உரிமை ஆணைக் குழுவின் திருமலைப்பிராந்திய இணைப்பாளர் திருமதி மதியாபரணம் தெரிவித்தர். (25)

# 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் போசாக்கு மட்டம் கணித்தல்

(மல்லாவி)

5 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்குமான போசாக்கு மட்டம் கணித்தல் வேலைத்திட்டம் எதிர்வரும் 22,23ஆம் திகதிகளில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட 33 நிலையங்களில் நடைபெறவுள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (24)

# கல்விசாரா ஊழியர் போராட்டத்திற்கு இ.தே. ஆசிரியர் சங்கம் ஆதரவு

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்று வேலை நிறுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியிருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (25)

### -ஐயன்குளம் அ.த.க பாடசாலையில்-

# மாவீரர் வீரவேங்கை முகுந்தாவிற்கு நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

(அலுவலக செய்தியாளர்)

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின்போது இராணுவத்தினருடனான நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை முகுந்தா (நாகரத்தினம் கஜநிதி) அவர்களின் 4 ஆம்ஆண்டு நினைஞ்சலியும், பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் ஐயன்குளம் அ.த.க பாடசாலையில் நடைபெற்றது. இம்மாவீரர் இப் பாடசாலையில் கல்வி கற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் கா.கருணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை வீரவேங்கை முகுந்தா அவர்களின் தந்தை நாகரத்தினம் ஏற்றிவைக்க, தாய் வசந்த மல்லிகா மலர்மாலை அணிவித்தார். பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்களின் மலரஞ்சலியினையடுத்து நினைவுரைகள் இடம் பெற்றன. நினைவுரைகளை மாணவ, மாணவிகளான செல்வி. ம.திலீபனா, செல்வி சி.சிவயோகினி செல்வன் அ.துசந்தன், செல்வி வி.பிரபாலினி, செல்வி வி.பிரசாளினி, ஆசிரியர் ப.தர்மபூபதி ஆகியோர் நிகழ்த்தினர்.ஆசிரியர் இ.சற்குணநாதன் நன்றியுரை வழங்கினார். (சோ)

# தொடர்பு கொள்ளவும்



புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் கடந்த 31.08.2004 அன்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவரது, உறவினர்களை வைத்தியசாலை நிர்வாகத்தினர் தேடுகின்றனர். இவரின் உறவினர்கள் உடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். (08)

# இளைஞர் மருத்துவமனையில்

கத்தி வெட்டுக்காயங்களுடன் திருமுறிகண்டியைச் சேர்ந்த சுரேஸ் என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு அக்கராயன்குளம், ஆரோக்கியபுரம் 8ஆம் கட்டையில் இடம் பெற்றுள்ளது.இரு குடும்பங்களுக்கிடையில் நடைபெற்ற குடும்பப் பூசலால் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. அக்கராயன் கிளிநொச்சிப் பணிமனையினர் இச் சம்பவம் சம்பந்தமாக புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (09)

### -பூநகரி பிரதான வீதியிலுள்ள

# கட்டடங்கள், பெயர்ப்பலகைகளை நகர்த்துமாறு கோரிக்கை

பூநகரியில் மன்னார் வீதி, கிளிநொச்சி வீதி போன்ற பிரதான வீதிகளின் மையத்திலிருந்து 50 அடிக்கு அப்பால் கட்டடங்களை 3 மாத காலத்திற்குள் நகர்த்துமாறு கேட்டுக்கொள்வதுடன், பெயர்ப்பலகைளை ஒரு வாரத்திற்குள் நகர்த்துமாறும் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். இதனை மீறுவோர் மீது பிரதேசசபைச் சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவர்அறிவித்துள்ளார். (34)




## 3வெளிநாட்டினர் கடத்தல்

(பாக்தாத்)

ஈராக்கின் பாக்தாத் நகரில் அல்-மன்சூர் பகுதியில் 2 அமெரிக்கர்கள் மற்றும் இங்கிலாந்து நாட்டவர் ஒருவரை தீவிரவாதிகள் நேற்று முன்தினம் பிடித்துச் சென்றுள்ளார்கள். அதிகாலையில் வானில் வந்த அவர்கள் துப்பாக்கி முனையில் இந்த 3 பேரையும் கடத்திக் கொண்டு சென்றுள்ளனர்.

ஏற்கனவே பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 2பேரும், இத்தாலி நாட்டைச சேர்ந்த 2 பெண்களும் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.




ஈராக்கின் பலூஜா நகரில் நேற்று முன்தினம் அமெரிக்கப் படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் குறைந்தது 30 ஈராக்கியர்கள் பலியாகினர். மேலும் 40பேர் காயமடைந்தனர். விமானத் தாக்குதலால் எழும் புகைமண்டலத்தையும், தாக்குதலில் படுகாயமடைந்த பெண்ணொருவருக்கு அவசரச் சிகிச்சையளிக்கப்படுவதையும் தாக்குதலின்பின் சேதமுற்ற காரை அவதானிக்கும் ஈராக்கியர்களையும் படங்களில் காண்க.

# ஐ.நா.வின் தீர்மானங்களுக்கு முரணான ஈராக் மீதான போர் சட்ட விரோதமானது!

### -பி.பி.சி.க்கான செவ்வியில் கொபிஅனான்

(லண்டன்)

**"ஈராக் மீது அமெரிக்கா போர்தொடுத்திருப்பது சட்டவிரோதமானது" என்று ஐ.நா.பொதுச்செயலாளர் கொபிஅனான் கூறியுள்ளார். பி.பி.சி.தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.**



ஈராக் மீது அமெரிக்கக் கூட்டணி நாடுகள் நடத்திய போர் சட்ட விரோதமானது. ஐ.நா.சபைத் தீர்மானத்திற்கு முரணானது. ஈராக் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முடிவை ஐ.நா.சபைதான் எடுத்திருக்க வேண்டுமே தவிர, அமெரிக்கக் கூட்டணி நாடுகள் அல்ல.

எதிர்வரும் சனவரி மாதம் ஈராக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டும். இப்போதுள்ள பாதுகாப்பு நிலைமையே அப்போதும் நீடிக்குமானால் தேர்தல் முடிவு நம்பும்படியாக இருக்காது. தேர்தலை எப்படி நடத்துவது என்பது குறித்து ஐ.நா.சபை ஈராக் இடைக் கால அரசிற்கு உதவியும், ஆலோசனையும் கூறுமானால் தேர்தல் நடத்துவதா? இல்லையா? என்பதை அந்த நாட்டு இடைக்கால அரசுதான் தீமானிக்க வேண்டும்

ஈராக் போர் தொடங்கியது முதல் வேதனையான பலபாடங்களை நாம் கற்றுக் கொண்டோம். ஐ.நா. அனுமதியும் சர்வதேச சமுதாய ஆதரவும் இல்லாமல் ஈராக் போன்ற சம்பவம் இனி நடக்கக்கூடாது என்றும் கொபி அனான் தெரிவித்தார். அடுத்தவாரம் ஐ.நா. பொதுச சபையின் வருடாந்தக் கூட்டம் தொடங்குகின்றது. இதில அனைத்து நாடுகளின் பிரதமர்களும், அதிபர்களும் கலந்துகொள்ள இருக்கிறார்கள். அதற்கு முன்பாக பொதுச்செயலாளர் இவ்வாறு கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## மதிப்பிட ஏற்பாடு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஏற்பட்ட சூறாவளியின் தாக்கத்தை மதிப்பிடும் பணிகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்: தென்பகுதியைக் கடந்த ஐந்து வாரத்தினுள் மூன்று முறை சூறாவளி தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஆப்கானிஸ்தானில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக அங்குசென்றுள்ள மேலதிக அமெரிக்கப்படையினர்.

# அமெரிக்க தூதரக அதிகாரிகளை நேபாளத்திலிருந்து வெளியேறப் பணிப்பு

### -பதற்றம் நிலவுவதையடுத்து நடவடிக்கை

(வோஷிங்டன்)

நேபாளத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடிய அபாயம் இருப்பதால் அங்கிருந்து அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் வெளியேறவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

ஈராக்கில் பணியாற்றிவந்த நேபாள நாட்டவர்கள் 12பேரை சில வாரங்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் கடத்திச்சென்று அமெரிக்காவுக்கு உதவுவதாகக் கூறி அவர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டனர்.

இந்தச்சம்பவத்தைக் கண்டித்து நேபாளத்தில் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. சில வழிபாட்டுத்தலங்களும் இடிக்கப்பட்டுள்ளன. இதனால் நேபாளத்தில் தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது.

இந்நிலையில், நேபாளத்தில் இருக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குடும்பத்தினருடன் வெளியேறவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அத்தியாவசியப் பணிகளுடன் தொடர்பில்லாத தூதரக அதிகாரிகளும், நேபாளத்தில் உதவிப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களும், உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மாணவர்களின் காதுகளை வெட்டி கோபத்தைத் தீர்த்த ஆசிரியர்!

(டாக்கா)

சத்தம் போட்டுப் பாடம் படிக்காததால் கோபமடைந்த பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் கத்தரிக்கோலால் 17 மாணவர்களின் காதுகளைத் துண்டித்தார். இந்தச்சம்பவம் பங்களாதேஷின் டோக்ரா மாவட்டத்தில் நடந்தது.

அங்குள்ள அரபிப் பள்ளிக்கூடத்தில் 5 முதல் 9 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் படித்து வந்தனர். அவர்கள் சத்தம் போட்டுப் படிக்காமல் முணுமுணுத்ததால் கோபம் கொண்ட ஆசிரியர் கத்தரிக்கோலால் 17 மாணவர்களின் காதுகளைத் துண்டித்தார். மாணவர்கள் வலிதாங்காமல் "குய்யோ முறையோ" என்று கதறி அழுதசத்தம் கேட்டு கிராம மக்கள் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினர். அங்கு ரத்தம் சொட்ட நின்ற மாணவர்களை உடனே உள்ளூர் வைத்திசாலையில் சேர்த்தனர்: 2பேருக்குத் தையல் போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆசிரியரைக் கிராம வாசிகள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே இழுத்து வந்து அடித்து உதைத்தனர். இதனால் காயமடைந்த ஆசிரியர் சாரி அப்துல் மஜீத் சர்தாரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

# ஆப்கான் சனாதிபதி மீது தலிபான்கள் தாக்குதல்

### -மயிரிழையில் உயிர்பிழைத்தார்

ஆப்கானிஸ்தானில் தேர்தல் அறிவிக்கப்பட்டு, பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தலை நகர் காபூலுக்கு வெளியே கார்டெஸ் என்ற இடத்தில் நேற்று முன்தினம் சனாதிபதி கர்சாய் தன்னுடைய முதலாவது தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். இதற்காக உலங்குவானூர்தியில் கார்டெஸ் நகருக்கு வந்தார். உலங்கு வானூர்தி தரை இறங்குவதற்கு சற்று நேரம் முன்பாக தலிபான் தீவிரவாதிகள் எறிகணை வீசித் தாக்கினார்கள்.



ஆப்கானிஸ்தான் சனாதிபதி காபூலுக்கு வெளியே தேர்தல் பரப்புரைக்குச் சென்றவேளை தலிபான்களின் தாக்குதலுக்குள்ளானதையடுத்து உலங்கு வானூர்தி அவசரமாகத் தரையிறங்கியதால் எழும் தூசு மண்டலம்.

அவர் தரையிறங்கிய இடத்திற்கு சற்றுத் தொலைவில் எறிகணை விழுந்து வெடித்ததால் கர்சாயும் அவருடைய ஆதரவாளர்களும் அதிஷ்ட வசமாக உயிர் தப்பினர். ஆனாலும் இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் அவரின் பிரச்சாரப்பணி நிறுத்தப்பட்டு உடனடியாகவே அவர் காபூலுக்குத் திரும்பினார்.

இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

# சம்பள உயர்வு கோரி பல இலட்சம் அரச ஊழியர் தொடர் போராட்டம்

### –தென்னாபிரிக்க அரசு பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுப்பு

(ஜொகனர்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் சம்பள அதிகரிப்புக்கோரி ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தென்னாபிரிக்க வரலாற்றில் மிகப்பெரிய வேலைநிறுத்தம் இதுவென்று கருதப்படுகின்றது.

சிவப்பு மற்றும் மஞ்சள் வர்ண மேலாடைகளை அணிந்து தென்னாபிரிக்காவின் பல்வேறு நகரங்களிலும் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் பேரணிகளில் பங்கேற்றுள்ளனர்.

இந்த வேலைநிறுத்தம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசாங்கத்திற்கும், ஏனைய தொழிற் சங்கங்கள் மீதும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர்கள், தாதிமார்கள், காவல்துறையினர், சிறைச்சாலை அதிகாரிகள் போன்றோரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எட்டுத் தொழிற்சங்கங்கள் 6வீத சம்பள அதிகரிப்பை நிராகரித்துள்ளன. 7வீத அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளன.

தென்னாபிரிக்காவிலுள்ள அனேகமான பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. தென்னாபிரிக்காவில் 11 இலட்சம் அரச ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 9இலட்சத்து 90ஆயிரம் ஊழியர்கள் தொழிற்சங்கங்களில் அங்கத்தவராக இருக்கின்றனர்.

இந்தவேலை நிறுத்தத்தால் நாள் ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு முப்பது மில்லியன் டொலர்கள் இழப்பேற்படும் என்று அச்சம் வெளியிடப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.



தென்னமெரிக்க நாடான வீக்ஸ்பேயில் வீசிய ஐவன் சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கியுள்ள குடியிருப்பு.

# கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இலவச மழலைகள் கணினிப்பூங்கா

**வன்னிப்பிரதேசத்தில், முதன்முதலாக சிறுவர்களுக்கான கணினிப் பூங்கா ஒன்று வரும் 26ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமையன்று, கிளிநொச்சி, பரவிப்பாஞ்சானில் திறந்து வைக்கப் படவுள்ளது.**

"இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச மழலைகள் கணினிப் பூங்கா" எனப் பெயரிடப் படவுள்ள இக்கணினிப் பூங்காவை, தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் மாணவர் அமைப்பும் இணைந்து நிர்வகிக்க வுள்ளன. இக்கணினிப் பூங்கா வைத் திறப்பதற்கான நிதியுத வியினை, இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயமும், ஐக்கிய அமெரிக்காவில் வதியும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களான திரு. திருமதி நிரா இரட்ணாதிக்கம் அவர்களும் இணைந்து வழங்கி யுள்ளனர்.

எவ்வித கட்டணங்களுமின்றி முற்றிலும் இலவசமாக இயங்க வுள்ள இக்கணினிப் பூங்கா, கணினி வசதிகளை மட்டுமன்றி, சிறுவர்களுக்கான பூங்கா ஒன்றுக் குரிய சுற்றுச் சூழலையும் கொண்ட தாக அமையவுள்ளது. சிறார்களுக்கு, அவர்களுக்கேற்ற விதத்தில் கணினி அறிவூட்டக்கூடிய விசேட கல்வித்திட்டம் ஒன்றும் TITA அமைப்பினால் இப்பூங்காவிற் கென தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் சிறுவர் இல்லங்கள் முதல் தொழில் பயிற்சி நிலையங்கள் வரை பல்வேறு சமூகசேவைப் பணிகளில் ஈடுபட் டுள்ள இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயமும், இப்பிர தேசங்களில் 13 கிராமிய தகவல் தொழில்நுட்ப நிலையங்களைத் திறந்துள்ள TITA அமைப்பும் இணைந்துஏற்கனவே 3 இலவச கணினிப் பயிற்சி நிலையங்களை யாழ்ப்பாணத்திலும், வட்டக்கச்சி யிலும் திறந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கிளி. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் கணினிப் பயிற்சியில் சித்திபெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளை யினரால் நடத்தப்பட்டுவரும் கணினிப் பயிற்சி நெறிகளில் முதலாவது பிரிவில் பயிற்சி பெற்று சித்தியடைந்த பயிலுனர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை இரு அமர்வுகளாக கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது அமர்வு காலை 9மணிக்கும் இரண்டாவது அமர்வு முற்பகல் 11.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.முதலாவது அமர்விற்கு பிரதம விருந்தினராக கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அவர்களும் சிறப்புவிருந்தினராக கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இரண்டாவது அமர்வுக்கு கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ப.அரியநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகவும், கரைச்சி கோட்டக்கல்விப் பணிப் பாளர் திருமதி.அரியநாயகம் அவர்கள் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பேருந்து சேவையை நடத்த திருவையாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளி.திருவையாறுப்பிரதேசத்தில் பேருந்து சேவை இன்மையால் பொதுமக்கள் பெரும் சிரமத் தினை எதிர்கொண்டு வருகின் றனர். பாடசாலை மாணவர்களும், உத்தியோகத்தர்களும் தமது நாளாந்தக் கடமையினை கிரமமாக நிறைவேற்ற முடியா துள்ளனர்.

திருவையாறு 1ஆம் பகுதி, 2ஆம் பகுதி, 3ஆம் பகுதி, கனகாம் பிகைக்குளம், சாந்தபுரம் வில்சன் வீதி போன்ற பகுதிகளில் ஆயிரத் துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இரணைமடுச் சந்தியில் இருந்து கனகாம்பிகை அம்பாள் கோவில், வில்சன் வீதி, கோவிந்தன் கடைச் சந்தி ஊடாக கிளிநொச்சி நகர் வரை பேருந்து சேவை ஒன்றை மேற்கொண்டால் தமது நாளாந்த செயற்பாடுகளை மக்கள் கிரம மாக நிறைவேற்ற ஏதுவாக அமை யும். எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள் கின்றனர். (15)

## பள்ளிக்குடாவில் மாலைநேர வகுப்புக்கள்

(பூநகரி)

பூநகரி-பள்ளிக்குடாப் பகுதி மாணவ மாணவியரின் கல்வி அபி விருத்தியைக் கருத்தில் கொண்டு மாலை நேரவகுப்புக்கள் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கடற்புலி அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதனும், பூநகரி. அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் பாண்டியனும் மக்க ளுடன் சேர்ந்து கலந்துரையாடிய தீர்மானத்திற்கு அமைய கடந்த புதன்கிழமை இரவு 6.30 மணிக்கு பூநகரி. பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோன் தலைமையில் வகுப்புக்கள் ஆரம்பமானது.

இம்மாலை நேர வகுப்பின் ஆரம்ப நிகழ்வில், பூநகரி வர்த்தக சங்கத்தலைவர் ரவி, கடற்றொழில் சங்கத் தலைவர் யோ.பிரான்சிஸ் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக் கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.இம் மாலை நேரவகுப்பின் ஆரம்பநாளான புதன்கிழமை தரம் 4-11 வரையான 84 மாணவர்கள் பங்கு பற்றினா என்பது குறிப்பிடத்தக்கது. (34)

## வீதியைத் திருத்த மக்கள் கோரிக்கை


(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சந்தைப் பகுதியில் இருந்து சில்வா வீதி ஊடாக கட்சன் வீதியை சென்றடையும் வீதி புனரமைக்கப்படுமா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.இவ்வீதியானது நீண்ட காலமாக எந்தவித திருத்த வேலைகளும் செய்யப்படாமல் பாலங்களும் உடைந்து காணப்படுகின்றன. எனவே இதை சம்பந்தப்பட்டோர் கவனம் எடுக்கும் வண்ணம் மக்கள் கேட்டுள்ளனர். (12)

## அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி - கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைச் செயலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற் றுக் காலை 7.40 மணியளவில் கிளிநொச்சி 156 ஆம் கட்டைப் பகுதி யில் இடம்பெற்றது. சங்கத் தலைவர் வை.குகராசா தலைமை யில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளி அரச அதிபர் தி.இராசநாயகம அவர்கள் கலந்துகொண்டு சங்க தலைமை செயலக மூன்று மாடிக்



கட்டடத்திற்கான அடிக் கல்லினை நாட்டிவைத்தார்.சங்கத் துணைத் தலைவர் க.சந்திரசேகரம், பாரதி புரம் கிராமசேவை அலுவலர் வைரவ நாதன், கிளி. மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முகாமை யாளர் து.இரத்தினசிங்கம், கிளி. முல்லை மாவட்ட கிராமிய வங்கி களின் சமாச முகாமையாளர் சு.கணப தப் பிள்ளை மற்றும் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்து சிறப்பித் தமைகுறிப்பிடத்தக்கது..(சோ.கு)


## அதிபர் கூட்டம் திகதி மாற்றம்

கிளிநொச்சி வலய பாடசாலை அதிபர்களுக்கு 21.09.2004 இல் நடைபெறவிருந்த அதிபர்கள் கூட் டம் அன்று நடைபெற மாட்டாது. 22.09.2004 புதன்கிழமை காலை 9.00மணிக்கு நடைபெறும் என கிளிநொச்சி வலய கல்விப்பணிப் பாளர் ப. அரியரத்தினம் தெரிவித் துள்ளார்.

## எரிக் தலைமையிலான குழுவினர் த.பு.கழக தலைமையகத்திற்கு விஜயம்

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே சமாதானக்குழுவின் விசேடபிரதிநிதி எரிக்சூல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் தமிழர் புனர்



வாழ்வுக்கழகத் தலைமை செயல கத்திற்கு விஜயம் மேற்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழக அதி காரிகளுடன் கலந்துரையாடியுள் ளனர். மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம் பகல் 10.00 மணியள வில் நடைபெற்றது.தமிழர் புனர் வாழ்வுக்கழகத் திட்டமிடல் பணிப் பாளர் லோரன்ஸ் கிறிஸ்டி, தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆலோசகர் பரமநாதன் ஆகியோர் இக்கலந் துரையாடலின் போது புனர்வாழ் வுக்கழகம் நடை முறைப்படுத்தும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரி வாக எடுத்துரைத்தனர். (சோ.கு)

## தலைமைத்துவப் பயிற்சி

பூநகரி கிராம மட்ட அமைப்புக் களைச் சேர்ந்தவர்களிற்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி பூநகரி தொழில் நுட்ப பயிற்சி நிறுவக மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழன் 8.30 மணி க்கு ஆரம்பமானது.

முதல்நிகழ்வாக மங்கலவிளக்கை பூநகரி பிரதேச செயலர் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர் ராஜன், பிரதேசசபை செயலாள் செ.பவானி சமாதான நீதிவான் சூசைநாதன் ஆகியோர் ஏற்றினர். தேசியக் கொடி ஏற்றப்பட்டதைத் தொடர் ந்து வரவேற்புரைகளை பிரதேச சபை ஆயுர்வேத மருத்துவ உத்தி யோகஸ்தர் எம்.இ.தில்லைநாயகம் ஆற்றினார்.தொடர்ந்து பிரதேச சபை விசேடஆணையாளர் க.தனபாலசிங்கத்தின் தலைமை யுரை இடம்பெற்றது தலைமை யுரையைத் தொடர்ந்து திருமதி செ.பவானி, திரு.இ.இராஜன் அவர்கள் விருந்தினர் உரையை ஆற்றினார்.

தொடர்ந்து பங்குபற்றுபவர்கள் அறிமுக உரை இடம்பெற்றது. தரவுகளைச் சேகரித்தலும் பிரச்சி னைகளை இனங்காணலும் என்ற தலைப்பில் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.அ.கேதீஸ்வரன் உரையாற் றினார். அதனைத்தொடர்ந்து சூழல் பாதுகாப்பு பேணுதல் தொடர் பாக உள்ளூராட்சி மன்றம் மற்றும் மத்திய சூழல் அதிகாரசபை யால் மக்களுக்கு கையளிக்கப்பட்டு அதிகார சபைகள் என்ற தலைப் பில் அபி. திட்ட உத்தியோகஸ்தர் திரு.பொ. கிரிதரன் உரையாற்றி னார். தொடர்ந்து குழுச்செயற் பாடு நடைபெற்றது இதனைத் தொடர்ந்து மந்த போசாக்கினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி திரு. எம்.ஜீ. தில்லைநாயகம் (ஆயுர் வேத மருத்துவர்) உரையாற்றி னார்.இறுதியாக சிறுவர் துஷ்பிர யோகமும் அதனைத் தடுப்பதற் கான சமூகப் பொறுப்புகளும் என்ற தலைப்பில் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தா எஸ் அனிதா உரையாற்றியதைத் தொடர்ந்து முதல்நாள் நிகழ்வு நிறைவுபெற்றது. (34)

## பரந்தனில் பஸ் தரிப்பிடமில்லை பயணிகள் அசௌகரியம்

(கண்டாவளை)

பரந்தனில் பிரயாணிகளுக்கு பஸ்தரிப்பிடம் இல்லாமல் வெய் யிலுக்கு, மழைக்கு ஒதுங்க இடம் இல்லாமல் பிரயாணிகள் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகி வருகின் றனர்.

இப் பிரயாணிகளின் துன்பம் போக்க தருமபுரத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது தாயாரின் நினைவாக பரந்தன் நகரில் கரை ச்சி பிரதேச சபைக்குச் சொந்த மான காணியில் மத்திய பேருந்து நிலையம் ஒன்றை அன்பளிப்பாக கட்டி முடித்துள்ளார். எனினும் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து மூன்று மாதகாலம் கடந்து விட்ட போதிலும் பேருந்து நிலையம் பிரயாணிகள் பாவனைக்கு திறந்து வைக்கப்படவில்லை. இதனால் பிரயாணிகள் தொடர்ந்தும் கஸ்டங் களை அனுபவித்து கால்கள் கடுக்க நின்றே பிரயாணம் செய் கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட வர்கள் இவ் விடயத்தில் கவன மெடுத்து பேருந்து நிலையத்தை திறந்து மக்கள் பாவனைக்கு விட வேண்டுமெனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.(14)

## கண்ணிவெடி விழிப்புணர்வு நடவடிக்கையில் வெண்புறா நிறுவனம் தீவிரம்

(கிளிநொச்சி)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணி வெடிகள் தொடர்பான விழிப்புணர் வுக் கருத்துக்களை மக்கள் மத்தி யிலும், மாணவர்கள் மத்தியிலும் தெளிவுபடுத்தும் வகையில் விழிப் புணர்வு கருத்தமர்வுகளை வன்னிப் பெருநிலப்பரப்பில் தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

வவுனியா வடக்கு, கிளி நொச்சி, முல்லைத்தீவு, வடம ராட்சி கிழக்குப் பிரதேசங்கள் உட்பட வன்னி பெருநிலப்பரப்பில் 300 இற்கும் மேற்பட்ட பாடசாலை களின் மாணவர்கள், ஆசிரியர் களிற்கும் கண்ணிவெடி விழிப்பு ணர்வுக் கருத்தமர்வுகள் நடை பெற்றுள்ளன. காணொலி நாடாக் கள் மூலம் கண்ணிவெடிகள் தொடர்பான படக்காட்சிகளும் காண் பிக் கப்பட்டுவருகின்றது. (15)


# எம் உயிரினும் மேலான தமிழீழ மக்களே!

**அணுவணுவாக பிரிந்துகொண்டிருக்கும் திலீபனின் உயிரைப் பார்க்கப் பொறுக்காத நான்கு நாட்கள் பாரதத்தை நம்பி நம்பிக்கையை இழந்த மக்கள். ஆற்றமுடியாத இந்தச் சாவிலிருந்து விடுபடுமாறு கதறியழுது மேடையில் பேசினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இலட்சியப்பற்று நிறைந்த திலீபன் அவர்கள் மக்கள் முன் தனது நாலாம் உரையை ஆற்றினார். இதுவே அவரது இறுதிப் பேச்சாகவும் அமைந்து விட்டது.**

எனக்கு முன் பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால்தான் நான் பேசவேண்டும் என நினைக்கின்றேன். இது எமது இலட்சியப் போராட்டம். இதையாரும் கைவிடுமாறு என்னைக் கேட்காதீர்கள். எனது முடிவு எனக்குத் தெரியும். ஏற்கனவே நான் உயிர்வாழ்வது அதிசயமாய் இருக்கிறது. ஏனெனில் நான் முதல் நாள் உண்ணாவிரதம் இருந்ததைவிட அதற்கு அடுத்தடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன். இன்று அதைவிட உற்சாகமாய் இருக்கிறேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும், நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகிவிட்டதும் தான். அதற்காகத்தான் அந்த ஒன்றே போதும். நான் சாகலாம்.

650 பேருடன் 651வனாக நான் போகிறேன். என்னைப்பற்றி யாரும் வீணாகக் கவலைப்படாதீர்கள். அலட்டிக்கொள்ளாதீர்கள்.

ஆனால், நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள் எனது அவையங்கள் செயலிழப்பதை நான் உணர்கிறேன். இனி ஒரு மனிதனாக என்னால் வாழமுடியாது என்பது எனக்குத் தெரியும். எனவே அது



மட்டுமல்ல இது ஒரு இலட்சியப் போராட்டம். எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக்கொடுக்கக் கூடியவர்கள். அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் நான்கு ஐந்துபேர் சாவதால் எதுவித தீங்கும் ஏற்படாது. மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும். நான் மூன்று தடவைகள் பேசியிருக்கிறேன். மூன்று தடவையும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகின்றேன் அதற்காகத்தான் சாகிறேன். எனது சாவைப் புரிந்துகொள்ளுங்கள். அதுதான் இந்தமக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற ஒரேகருத்தைத்தான் கூறுகின்றேன். எனவே தயவுசெய்து இலட்சியத்தைக் கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போல இருக்கும். நாங்கள் சாதாரணமாக ஆளவேண்டும் என்ற ஆசையாலோ, வாழவேண்டும் என்ற ஆசையாலோ இயக்கத்திற்கு வரவில்லை. எம் தலைவரும் எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை. எமது இயக்கமும் அவ்வாறில்லை. தயவுசெய்து மீண்டும் கேட்கின்றேன், மன்றாட்டமாகக்கேட்கின்றேன் என்மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அவ்வாறு கேட்காதீர்கள். இலட்சியத்தை அவமதிக்காதீர்கள். தயவுசெய்து எனக்கு உண்மையில் (சிரிப்புடன்) பெரும் ஆச் சரியமாய்த்தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. உண்மையில் நான் (சிரிப்புடன்) நேற்றையை விட அதிகஉற்சாகமாக இருக்கிறேன். எனது உடல் நிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அனைவரதும் பிரார்த்தனையோ எனக்குத் தெரியாது. ஆனால் மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான். எமது போராட்டம் தொடரப்போகிறது. மக்கள் புரட்சி வெடிக்கப்போகிறது. அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள். எனது பேச்சிலேயே நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். நான் இன்று எவ்வளவு தூரம் உற்சாகமாய் உள்ளேன் என்று. நேற்று என்னால் பேசமுடியவில்லை. ஆனால் இன்று (சிரிப்புடன்) தாராளமாகப் பேசமுடிகிறது. ஏனோ தெரியவில்லை. எனவேதான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்பது நீங்கள் எங்கள் போராட்டத்திற்குத் தயாராகுங்கள். அதைத்தான் நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நீங்கள் போராடுங்கள். நான் மேலேயிருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பேன். நாம் என்றும் உங்களை விட்டுப்போகமாட்டோம். எங்கள் உடல்மட்டும்தான் போகும். உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும். அதை மறந்துவிடாதீர்கள். எம்மைத் தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள், சகோதரிகள் வருவார்கள். அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள். அவர்களுக்கு வழிவிடுங்கள். நான் ஏற்கனவே பலதோழர்களிடம் கூறிவிட்டேன். நான் உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். ஏனைய தோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர் அவர்களையும் மறக்காதீர். விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர் இலட்சியம் தான் முக்கியம் உயிர் முக்கியமல்ல. அவர்களது வாழ்வு முக்கியமல்ல சாப்பாடோ, தண்ணியோ முக்கியமல்ல. அவர்களது இலட்சியம் தான் முக்கியம். அதை நிலைநாட் டத் தான் நான் தலைவரால் முதன் முதலாக நியமிக்கப்பட்டே டன். தலைவருடன் சண்டையிட்டுத தான் இவ் அனுமதியைப் பெற்றேன். எனவே எனக்கு எனது முடிவு தெரியும். எனவே தயவு செய்து நீங்கள் அலட்டிக்கொள் ளாதீர்கள். தயவுசெய்து என்மீது கொண்ட பாசத்தாலோ அல்லது வேறு எந்தக்காரணத்தாலோ தயவுசெய்து பேச்சாளர் எவரும் இந்தக் கருத்துடன் மேடையில் பேசவேண்டாம். இது என்னை அவமதிப்பது போல் உள்ளது. என்னைத் தண்ணீர் குடிக்குமாறு கேட்பது என்னை அவமதிப்பது போல் உள்ளது. நான் அதற்காக இங்கு வந்திருக்கவில்லை. அதைத்தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன் உண்மையைச் சொல்கிறேன் எனது மூளை ஒன்றையுமே கிரகிக்கவில்லை. (சிரிப்புடன்) ஒருவேளை மூளை மாறாட்டமாய்ப் போய்விட்டதோ எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து மன்னியுங்கள். நான் ஒரே விடயத்தைத் திரும்பத்திரும்பச் சொல்வது எனக்குத் தெரிகிறது. தயவுசெய்து மன்னியுங்கள். நான் பேசுவதாக இருக்கவில்லை.எனக்கு முன் பேசிய பேச்சாளரால் தான் பேச வேண்டி வந்தது. தயவுசெய்து இதைத் தவிர்த்து நீங்கள் மக்களை எழுச்சியூட்டும் வகையிலா கப் பேசுங்கள் நான் எந்த இலட் சியத்திற்காகச் சாகிறேனோ அந்த இலட்சியத்தை அடையக்கூடிய வகையில் மக்களை எழுச்சியூட் டும் வகை யில் தயவுசெய்து பேசுங்கள் அதைத் தான் விரும்புகிறேன். அதைத் தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன் இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

*வணக்கம்.*

## உரைப்போம் திலீபன் நாமம்

ஊரெழு எனும் ஊரினிலே
உதித்த எங்கள் செங்கரும்பே
இருளைப் போக்கும் கதிரவனே
ஈழத் தமிழனின் இன்னுயிரே
ஈழமக்கள் விடிவிற்காய்
உன் உயிரைத் தந்தாயே
அகிம்சைத் தந்தை நீயென்று
உனை உணர்ந்தோம் நாம் இன்று!
ஊர்களே அழுதது அன்று!
உலகம் வியந்தது நின்று
நீ நல்லையில் கூறிய வசனங்கள்
இன்று அரங்கேற்றம் தெரியுது கண்ணில்
அண்ணாஉன் கணக்குத் தப்பாது
உன்அகிம்சைப் போருக்கு ஈடேது
கிடைக்கும் நாளை தமிழீழம்
உரைப்போம் திலீபன் நாமம்....



தி.தீபா

## புலிகளால் முன்வைக்கப்பட்ட இ.த.அ.சபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்

### யாழ்.சென்ற எரிக்கிடம் கல்விசார் அமைப்புக்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப்படையிலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இரு பகுதியினரையும் சமமாக மதித்து சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் சர்வதேச சமூகத்தைக் கோரும் மகஜர்களை யாழ்.மாவட்ட கல்விசார் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த நோர்வேயின் சமாதானத் தூதுவரிடம் கையளித்துள்ளன சர்வதேச சமூகத்தினரால் வழங்கப்படவிருக்கும் நிதியுதவிகள் உண்மையிலேயே பாதிப் படைந்த மக்களுக்கே சென்றடைய வேண்டும். இது போரை ஊக்குவிப்பதற்காக அமையக்கூடாது. சர்வதேச சமூகம் நிரந்தர சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். என அந்த மகஜர்களில் கேட்கப்பட்டுள்ளது. தமிழீழ சர்வதேச மாணவர் பேரவை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம், யாழ்.கல்வி மேம்பாட்டு பேரவை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன இந்த மகஜர்களைக் கையளித்துள்ளன.

## சாவகச்சேரிப் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டுமாணப்பணிகளில் தடை

### - வருட இறுதிக்குள் முடிவடைவதும் சந்தேகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் கட்டும் பணிகள் தற்பொழுது தடைப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீர்ப் திட்டத்தின் உதவியுடன் ஒருகோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் சாமுவேல் அண்ட்கம்பனி என்ற தனியார் நிறுவனத்தால் கட்டப்பட்டு வரும் இக்கட்டடத்தின் ஐம்பது சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் திடீரென இப்பணிகள் தடைப்பட்டு இருப்பதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கட்டடப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் என்ன காரணத்தால் இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்ற விவரம் தெரியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டடப் பணிகள் டிசெம்பர் இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என உறுதிதரப்பட்ட நிலையில் திடீரென வேலைகள் நிறுத் தப்பட்டுள்ளதால் குறித்த காலத்திற்குள் கட்டிமுடிக்கப்படுமா? என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. (28)

## யாழ்.திருநெல்வேலிச் சந்தியில் பொலிசார் திடீர் சோதனை

யாழ்.திருநெல்வேலிச் சந்தியில் சிறிலங்காப் பொலிசார் நேற்று முன்தினமிரவு திடீர் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேற்படி பகுதிக்கு வந்திறங்கிய 20 இற்கும் மேற்பட்ட பொலிசார் அப்பகுதியில் உள்ள சகல வீதிகளையும் சுற்றிவளைத்து நின்று அப் பகுதியால் சென்ற வாகனங்களை வழிமறித்துச் சோதனை செய்தனர்.

பொலிசார் ஆயுதங்கள், குண்டான் தடிகள் சகிதம் 4 மணிநேரமாக மேற்கொண்ட இத்திடீர் நட வடிக்கையால் அப்பகுதியில் பர பரப்பு நிலவியது. (33)

## உசன் இராமநாதன் ம.வி.மைதானம் படையினரால் மீண்டும் ஆக்கிரமிப்பு


படையினரின் பயன்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டதாக சிறிலங்காப்படையினரால் அறிவிக்கப்பட்ட உசன் இராமநாதன் மகா வித்தியாலய மைதானத்தை மாணவர்கள் பயன்படுத்த மீண்டும் தடை விதிததிருப்பதாகத் தெரியவருகிறது.


இதனால் இப்பாடசலை மாணவர்களின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக மாணவாகளின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.வலயம் மற்றும் மாவட்ட ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாடத் தகுதி வாய்ந்த மாணவர்கள் இப் பாடசாலையில் பயின்றும் கூட பயிற்சிகள் பெறுவதற்குப் படையினர் இம்மைதானத்தைப் பயன்படுத்த தடைகள் விதித்துள்ளதால், மாணவர்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த சில் மாதங்களுக்கு முன்னால் படையினரால் விடுவிக்கப்பட்டதாகக்கூறி, மீள் கையளிப்புச் செய்வதாக அறிவித்து பெரும் எடுப்புடன், இராணுவப்பொறுப்பதிகாரி ஒருவரால் இப்பாடசாலை அதிபரிடம் குறித்த மைதானம் கையளிக்கப்பட்டிருந்தது ஆனால் தற்போது. படையினர் மீண்டும் தங்கள் சுயரூபத்தை வெளிப்படுத்தி உள்ளதாக இப்பகுதி மக்களிடம் இருந்து கடும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)


# உலகிலிருந்து புற்று நோயை அகற்றலாமா?


நீங்கள் குணப்படுத்த முடியாத- மருந்துகள் கண்டுபிடிக்க முடியாத ஒரு நோய்க்கு உட்பட்டிருந்தால், சமூகத்தில் நீங்கள் ஒதுக்கப்பட்டு வாழ்க்கை வெறுப்பூட்டும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தால் என்ன நினைப்பீர்கள்? உங்கள் மனம் மீண்டும் பாதிக்கப்பட்டு மீண்டும் ஒதுக்கப்பட்டாலும் அவற்றிலிருந்து பாதுகாக்க புதிய தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

அதன்படி உலகெங்கும் மனித உயிர்களைப் பலியெடுக்கும் புற்று நோய் என்ற காலனை வெற்றிகண்டு அப்பாவி நோயாளிகளின் உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளும் தொழில்நுட்பம கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புற்றுநோய்க்கான மூலகாரணம் யாது? பொதுவாக எந்த ஒரு நோய்க்கும் காரணமாயமைவது மனிதனின்



உணவு பழக்கங்களும், மது பானம், புகைப்பிடித்தல் ஆகியனவாகும். ஆயினும் புதிய கண்டுபிடிப்பின் மூலம் திடகாத்திரமான மேற்படி தீய பழக்கங்களற்றவர்களும் இந்நோய்க்குட்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதுவரை இரசாயன முறையிலான சிகிச்சைகளே மேற்கொள்ளப்படுவதுடன், லேசர் கதிர் மூலமும் புற்றுநோய் கட்டுப்படுத்தப்படுகிறது.

இந்த முறையிலான சிகிச்சையில் மனிதனின் பாதிக்கப்பட்ட பகுதிகளை மட்டுமன்றி நோய்க்குட்படாத பகுதிகளும் பாதிக்கப்படுகின்றன.

எனினும் அண்மையில் அமெரிக்காவின் (FDA) உணவு, மருந்து கட்டுப்பாட்டு மையத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மட்டும் குணமாக்கும் ஊசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை உடலில் புற்றுநோய் ஏற்பட்டுள்ள பகுதியை மட்டும் அடைந்து நோயைக் குணப்படுத்தவல்லது எனவும் ஏனைய பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்ாது என்றும் கூறப்படுகிறது.

அம்மருந்து வகைகளான டார்சிவா (Tarceva) என்றும் எவஸ்ரின் (Avastin) என்றும் அழைக்கப்படுகின்றன.

புற்றுநோய் தீவிரமாக வளர்வதற்கு காரணமாவது DNA அமைப்பு சக்தியற்றுப் போவதே. எவ்வாறாயினும் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்கு முன்பு அது ஏற்படுவதற்கான காரணத்தை கண்டுபிடித்தலே முக்கியம்.

நுரையீரல் புற்று நோய்க்காக தயாரிக்கப்பட்ட இரெசா (Iressa) மூலம் புரத அணுவை செயலிழக்கச் செய்து வளர்ச்சியை தடைசெய்யலாம். இதன் மூலம் 50 வீதம் கட்டுப்படுத்தலாம் என அமெரிக்கரான லுவி கூறுகிறார்.

பொதுவாக புற்றுநோய்க் கிருமி நிரந்தரமான உயிரணுவல்ல. அது மாற்றமடைதலுக்கு உட்படும். அது எந்த வயதினரைத் தாக்குகின்றது என்பதைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை நடைபெறுகிறது. பாதிக்கப்பட்டவருக்கு பல்வேறு மருந்துகளை செலுத்தி பரீட்சித்துப்பார்த்து எது பொருத்தமானது எனக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

எனினும் சிகிச்சையின் போது மருந்துகள் எவ்வளவு தூரம் கைகொடுக்கிறது என்பதை உறுதியாகக் கூறமுடியாது என்றும், ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுவதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

மேற்படி ஆய்வுகள் மூலம் எவ்வாறான நோயாளிக்கு என்ன வகை மருந்து செலுத்தப்பட வேண்டும் எவ்வகையான புற்று நோயால் ஒருவர் பீடிக்கப்பட்டுள்ளார் என்பவை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.




"Fcell" எனப்படும் இக்கார் வேறு எரிபொருள்களின்றி தனித்து மின்கலத்தினால் இயங்கக்கூடிய இது ஜெர்மனியத் தயாரிப்பு. இது அங்குள்ள பல்கலைக்கழக வேந்தருக்கு ஒருவருட பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

## வெப்பத்தைத் தணிக்கும் பூச்சுக்கு புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல்

திறந்த வெளியில் விளையாட்டில் ஈடுபட்டுவருவோரும் கடற்கரையில் உலாவித்திரியும் உல்லாசப்பயணிகளும் சூரியனின் வெப்பத்தைத் தணிக்க தமது உடலில் ஒருவகைப் பூச்சை பூசிக்கொண்டு திரியும் பழக்கம் கிறிஸ் நாகரிகம் ஆரம்பமான முதல் ஏற்பட்டதொன்றாகும்.

எனினும் இதனால் மேலும் ஒரு நன்மை கிடைப்பது பற்றி யாரும் சிந்தித்திருக்க முடியாது அதாவது மனிதனின் தோலைப் பாதுகாக்கும் பொருட்டு பூசப்படும் பூச்சுக்களுக்கு தோல் புற்றுநோயைத் தடுக்கும் சக்தியிருப்பதை அறிந்திருக்க முடியாது.

இந்த உண்மை அண்மையில் நெதர்லாந்தில் எலிகள் மூலம் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றின் பெறுபேறு மூலம் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வின் போது நெதர்லாந்து விஞ்ஞானி கில்கிறேட் சில எலிகளுக்கு TTdimer எனப்படும் பூச்சுக்களை பூசி சூரிய வெப்பத்திற்கு ஒப்பான செயற்கை வெப்பக் கதிர்களைப் பாய்ச்சியுள்ளார். சில எலிகளுக்கு பூச்சைப் பூசாது ஒளிர்க்கதிர் முன்வைத்துள்ளார். இவற்றில் பூச்சுப்பூசப்பட்ட எலிகளில் 22 வீதமானவற்றுக்கு 24 வாரங்களில் புற்றுநோய்த் தாக்கம் ஏற்படாமையும் பூச்சுப்பூசப்படாத எலிகளில் 22 வீதமானவை புற்றுநோய்த் தாக்கத்திற்குள்ளாகியமையும் அறியவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஆயினும் இதுவரை மனிதர்களில் இந்த ஆய்வு நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## வினாடிக்கு 2.8 இல்ட்.கோடி கணக்கீடுகளைச் செய்யவல்ல கணினி

'லார்டு ஆப்தி ரிங்க்ஸ்' படத்தில் பயன்படுத்தப்பட்ட சூப்பர் கணினி விற்பனைக்குத் தயாராக உள்ளது.

உலகின் அதிக சக்தி வாய்ந்த 500 சூப்பர் கணினிகளில் 60 ஆவது இடத்தில் உள்ளது. இந்தக் கணினி ஒரு விநாடியில் 2.8 இலட்சம் கோடி கணக்கீடுளைச் செய்யவல்லது இந்தக் கணினி.

இந்தக் கணினியின் உரிமையாளர்கள் லார்டு ஆப்தி ரிங்க்ஸ் இயக்குனர் ஜாக்சன் மற்றும் ஜியோ ஐ நிறுவனம் இதன் திறனை மேலும அதிகரித்து. உலகின் அதிக சக்தி வாய்ந்த கணினிகளின் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இடம் பெறச் செய்ய முடியுமாம்.'லார்டு ஆப்தி ரிங்க்ஸ்' படத்தில் வரும் ஸ்பெஷல் எ.'.பெக்ஸ் காட்சிகள் இந்தக் கணினியின் உதவியோடு உருவாக்கப்பட்டவைதான்.

## இரத்தம் உறையா நோய்க்கு மீனிலிருந்து மருந்து

இரத்தம் உறையாமை நோய் (ஹீமோபிலியாக்ஸ்) மற்றும் துப்பாக்கியால் சுடப்பட்டவர்களுக்கு மீன்கள் மூலம் தீர்வு காணும் முயற்சியில் விஞ்ஞானிகள் களமிறங்கியுள்ளனர்.

திலபியா என்னும் மீனுக்குள்ளே புதுவித ஜீன்களைச் செலுத்திப் பரிசோதனை நடத்தியுள்ளனர் விஞஞானிகள். இதன் முடிவில் இரத்தம் உறையாமை நோய்க்கு மருந்தாக இம்மீன் பயன்படும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எனினும் சிறிது காலத்துக்கு பிறகுதான், 'இது பாதுகாப்பானது, சிறந்த முறையில் செயல் படுகிறது' என்று அறிவிக்க முடியும். சௌதாம்ப்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் இது பற்றி கூறுகையில், "மனிதர்களுக்கு மீன்கள் மூலம் வியாதிகள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் ஏதும் இதுவரை கண்டறியப்படவில்லை. ஆகவே மீனை வைத்து இந்தச் சோதனை செய்ய ஆர்வம் பிறந்தது" என்றார்.

## நாய்க்குட்டி வடிவில் உருளைக்கிழங்கு



உருளைக்கிழங்கு உருண்டை வடிவில், நீள் வடிவில், தட்டையாக இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அசல் நாய்க்குட்டி உருவிலான ஒரு உருளைக்கிழங்கை ஏமனில் வேலை பார்க்கும் அஜாஸ், சுகைல் என்ற 2 வாசகர்கள் புகைப்படம் எடுத்து அனுப்பி உள்ளனர். பேரணாம்பட்டைச் சேர்ந்த இவர்கள் தற்போது சானா என்ற நகரில் உள்ள சன்ரைஸ் உணவகத்தில் தலைமை சமையல் நிபுணர்களாக பணிபுரிகிறார்கள். படத்தில் நீங்கள் காண்பது அவர்கள் அனுப்பிய உருளைக்கிழங்கு நாய்க்குட்டியைதான்.

## தூக்க மாத்திரை சிறுநீரகத்தைப் பாதிக்கும்

குறிப்பிட்ட வயதைத் ஏண்டிய முதியவர்களுக்குத் தூக்கம் என்பது தில தோறும் கேள்விக்குறியான விஷயம் தான். இளமைப்பருவத்தில் படுத்தவுடனேயே தூக்கம் வருவதைப் போல இப்போது அவர்களுக்கு வருவதில்லை. பிறக்கும் போது அதிக நேரம் தூங்கும் மனிதனுக்கு பின்னர் வயது ஏற ஏற பல்வேறு பிரச்சினைகளால் தூங்கும் நேரம் குறைந்துபோகிறது.

தூக்கம் இன்மைப் பிரச்சினையில் இருந்து தப்பிக்க விரும்புபவர்கள் தூக்க மாத்திரைகளை நாடுகின்றார்கள். ஆனால் இத்தகைய மாத்திரைகளை ஏதோ ஒன்றிரண்டு நாட்களுக்கு அல்லது ஒரு வாரம் வரை கூடப்பயன்படுத்தலாம். அதை மீறி வாரக்கணக்கில், மாதக்கணக்கில், வருடக்கணக்கில் பயன்படுத்தி வந்தால் சிக்கல் தான். அதுவும் சாதாரண சிக்கல் அல்ல. சிறுநீரகச் சிக்கல். என்ன புரியவில்லையா? Acetaminophen தூக்க மாத்திரைகளைக் கூடுதலாக மற்றும் நீண்ட நாள அடிப்படையில பயன்படுத்துபவர்களுக்கு சிறுநீரகங்களின் செயற்பாடு பாதிக்கப்படுகிறது. மோசமான கட்டத்தில் சிறுநீரகங்களின் இயக்கம் தடைப்பட்டுப் போகக் கூட வாய்ப்புண்டு. இதேபோல Diphenhydramine என்ற மற்றொரு மாத்திரையும பயன்படுத்துகிறார்கள். இந்த மாத்திரையை நீண்ட நாள் பயன்படுத்தும் போது முதியவர்கள் மத்தியில் குழப்பம் உருவாகும்.

# மாற்று வலுவுள்ளோரை மனித மாண்புடன் மதிப்போம்

எமது உள்நாட்டுப் போர் காரணமாக எமது உறவுகள் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளன. அவ்வகையில் அவையவங்கள் இழப்பு, போரின் பின்விளைவுகளால் வந்த பாதிப்புக்கள் எனப் பல காரணங்களால் ஊனமாக்கப்பட்டுள்ளார்கள், ஊனமென்பது இன்றைய உலகில் மருவி வரும் ஒரு-சொற்பதம் ஆகும். அதற்குப் பதிலாக மாற்றுவலுவுள்ளோர் (DIFFRENTLY APLED) என்ற சொற்பதமே பயன்படுத்தப்படுகிறது.

**மாற்று வலுவுள்ளோர் யார்?**

*. முழுமையாகப் பார்வையிழந்தவர்.

*. குறைந்த பார்வையுடையவர்.

*. கேட்கும் மற்றும் பேசும் திறன் பாதிக்கப்பட்டவர்.

*. இயக்கத்திறன் பாதிக்கப்பட்டவர்.

*. தீவிர மனநோயினால் பாதிக்கப்பட்டவர்.

*. மன வளர்ச்சி குறைந்தவர்.

*. தொழுநோயினால் ஊனமானவர்.

இவர்களே மாற்றுவலுவுள்ளோர். இவர்களில்- 40% பாதிக்கப்பட்டவரை மாற்றுவலுவுள்ளவர் எனலாம். 80% இற்கும் மேல் பாதிக்கப்பட்ட ஒருவரை மிகவும் பாதிக்கப்பட்ட மாற்றுவலுவுள்ளோர் எனலாம். இவர்களிற்கான குறைபாட்டை உறுதிசெய்து சான்றிதழ் வழங்குவது அரச மருத்துவர் மட்டுமே.

**ஒருவர் மாற்று வலுவுள்ளோர் (ஊனம்) ஆவதற்குரிய காரணங்கள்.**

*. மாமன் பிள்ளை போன்ற மிகவும் நெருங்கிய உறவில் திருமணம் செய்தல்.

*. 18 வயதிற்குள்ளே 35 வயதிற்கு மேலே தாய்மையடைதல்.

*. கருவையழிக்க தங்களுக்குத் தெரிந்த வழிகளைப் பின்பற்றி அது முழுமை பெறாமல் போகுதல்.

*. கர்ப்ப காலத்தில் சரியான மருத்துவப் பரிசோதனை செய்யப்படாமை. மருத்துவர்களால் பரிந்துரைத்தல்.

*. கர்ப்ப காலத்தில் சத்தான உணவு இல்லாமை.

*. கர்ப்பிணிப் பெண்களை தொற்று நோய் தாக்குதல்.

*. பயிற்சி பெறாத மருத்துவர்களைக் கொண்டு பிரசவம் பார்த்தல்.

*. இராணுவ நடவடிக்கை.

> கிளி/மாற்று வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 13.09.2004-19.09.2004 வரையான கொடிவாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

**மாற்று வலுவுள்ளோரின் உரிமைகள்**

*. பணி இடங்களைக் கண்டறிதல்.

*. சிறப்பு வேலை வாய்ப்பு மையங்கள் அமைத்தல்.

*. அரச பணிகள் பற்றிய விபரங்களைத் தொகுத்து சிறப்பு வேலை வாய்ப்பு மையங்களுக்கு வழங்குதல்.

*. வேலை வாய்ப்புள்ள பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல்.

*. வேலையில் சேர்வதற்குரிய வயது வரம்பைத் தளர்த்துதல்.

*. எல்லா அரச புனர்வாழ்வுத் திட்டங்களிலும் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கல்.

*. ஊனத்தை காட்டி பதவியுயர்வை மறுத்தல். மற்றும் வேலையில் இருந்து நீக்குதலைத் தடுத்தல்.

**மாற்று வலுவுள்ளோரின் உரிமைகள் போக்குவரத்து பொது இட வசதி**

*. மாற்று வலுவுள்ளோருக்கு இருக்கை வசதிகள்.

*. கழிப்பறை வசதிகள்.

*. அரச அலுவலக அமைப்பு.

*. சாலை எச்சரிக்கைக் குறிகள்.

*. தடையற்ற சூழலை உருவாக்க வேண்டும.

**அவர்களுக்கான இவ்வுரிமைகள் எப்போது அமுலுக்கு வரும்?**

*. சம உரிமை?

*. கல்வி வாய்ப்பு?

*. பொழுதுபோக்கு வசதிகள்?

*. மருத்துவ வசதிகள்.?

*. வேலைவாய்ப்புகள்

*. தடைகளற்ற சூழல்

*. சலுகை விலையில் நிலம்

மாற்று வலுவுள்ளோருக்கான தண்டனையை நீதிமன்றங்கள் மனித நேயத்துடன் அணுகுமா?

*. மாற்று வலுவுள்ள பிள்ளைகளுக்கான கல்விக்குத் தடைவிதித்தால் சம உரிமை, நீதிமன்றம் ஏறத் தயாரா?

*. (1994 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்கச் சட்டத்தின் படி)

1.கல்வி

2.பாதுகாப்பு

3.வேலைவாய்ப்பு

இது ஊனமுற்றோரின் உரிமை.

> மாற்று வலுவுள்ளோர் சட்டத்தை அமுல்படுத்த சங்கமாய், கூட்டமைப்பாய் திரண்டெழுவோம்.

**மாற்றீடான வலுவுள்ளோர் சங்கம் சாதிப்பது என்ன?**

*. மாற்று வலுவுள்ளோர் தங்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தல்.

*. சமுதாயத்தில் சம மதிப்பு மற்றும் உரிகைளை வென்றெடுத்தல்.

*. மாற்றுவலுவுள்ளோருக்கான தனிப்பட்ட திறமைகளை வளர்த்தல் மற்றும் வெளிப்படுத்தல்.

*. தங்களுடைய மற்றும் சமுதாயத் தேவைகள் பிரச்சினைகளை பிற சமுதாய அமைப்புக்களுடன் சேர்ந்து நிறைவேற்றுதல்.

*. கிராமப் புறங்களில் உள்ள அனைத்து மாற்றுவலுவுள்ளோர்களையும் ஒருங்கிணைத்தல்.

*. ஊனம் வராமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

*. மாற்று வலுவுள்ளோரின் முன்னேற்றத்திற்காக இயற்றப்பட்டுள்ள சட்டதிட்டங்களை அமுல் படுத்த வேண்டிய முயற்சிகளில் ஈடுபடுதல்.

*. சமுதாயம் சார்ந்த புனர்வாழ்வுத் திட்டங்களில் மாற்று வலுவுள்ளோர் பயன்பெறும் வகையில் கல்வி, மருத்துவம், சிகிச்சை, உதவி உபகரணங்கள், தொழிற்பயிற்சி, கடனுதவி, ஆலோசனைகள் போன்றவற்றில் அரச சாரா நிறுவனங்களின் உதவியோடு பயன்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

*. தேவைப்படும் நிதி ஆதாரங்களைத் திரட்டுதல்.

எனவே மாற்று வலுவுள்ளோரும் சமுதாயத்தின் ஒரு அங்கத்தினரே. அவர்களுக்கும் சமுதாய வளர்ச்சியில் பங்குண்டு. எனவே அவர்களையும் சமமாக மதித்து அபிவிருத்தியின் வளர்ச்சிப் போக்கில் அவர்களது கைகளுடன் எங்களது கைகளும் இணையட்டும்.

**கிளி/மாற்றுவலுவுள்ளோர் புனர்வாழ்வுச்சங்கம். யாழ்சாலை, கிளிநொச்சி.**

## சனாதிபதிக்கு நினைவுச்சின்னம் தயா சந்தகிரி வழங்கினார்

சிறிலங்காவின் முப்படைகளின் தலைமை அதிகாரியான வைஷ் அட்மிரல் தயா சந்தகிரி கடந்த புதன்கிழமை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவை சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பு சனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.புதிய தலைமை அதிகாரி வைஷ்அட்மிரல் தயா சந்தகிரி சனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் இச் சந்திப்பின்போது வழங்கியுள்ளார்.

## ஐந்து கொள்ளையர் கண்டியில் கைது

(கொழும்பு)

கண்டிப் பிரதேசத்தில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படும் 5 இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கிகளும், பெருமளவு தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் கண்டி அணிவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் ஒருவர் அவுஸ்திரேலிய மெல்போன் பல்கலைக்கழகத்தில் பயின்றவர் எனவும், தற்சமயம் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## படையினரின் சோதனைக் கெடுபிடிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரிப்பு

**அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மக்கள் புகார்**

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடிப் பாலம், ஏறாவூர், ஓட்டமாவடிப் பாலம் ஆகிய இடங்களில் படையினர் பயணிகள் வாகனங்களைக் கடுமையாக சோதனை செய்வதாகவும். துருவித் துருவி விசாரணை செய்வதாகவும் தெரிவிக்கின்றனர். இதேவேளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களான வவுணதீவுப்பாலம், செங்கலடி கறுத்தப்பாலம், அம்பிளாந்துறை ஆகிய இடங்களில் படையினரின் சோதனைக் கெடுபிடிகளால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## மின்சார இணைப்பை ஏற்படுத்துவதில் அரசால் திருமலையில் தமிழ்க் கிராமங்கள் பல புறக்கணிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல கிராமங்கள் ஊடாக மின்விநியோக கேபிள்கள் செல்கின்றன. ஆனால், அக்கிராமங்களுக்கு இன்னும் மின்விநியோகம் வழங்கப்படவில்லை. இது கவலைதரும் நிலையாகும் என்று திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்துக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

“கார்ப்” திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. மூதூர்ப் பிரதேச செயலர் பிரிவில் சூனித்தீவிலிருந்து ஜவுனிமுனை வரையும் இலக்கந்தையிலிருந்து சம்பூர் வரையும், கடற்கரைச் சேனையி லிருந்து சீனன்வெளி வரையும் குச்சவெளிப்பிரதேச செயலர் பிரிவில் குச்சவெளியிலிருந்து திரியாய் வரையும் உள்ள கிராமங்களுக்கு மின் விநியோகம் வழங்க வேண்டும்” என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

“சேருவிலப் பிரதேச செயலர் பிரிவில் லிங்கபுரம், ஆதியம் மன்கேணி தங்கநகர், மூதூர் பிரதேச செயலர் பிரிவில் பாலத்தடிச்சேனை, பாலத்தோப்பூர், நாராயணபுரம், அம்மன்நகர், கணேசபுரம், தங்கபுரம், ஸ்ரீநிவாசபுரம், இந்திக்குளம், தம்பலகமம் பிரதே செயலர் பிரிவில் பொற்கேணி, சிவசக்திபுரம் கிண்ணியா பிரதேசசெயலர் பிரிவில் சுங்கான் குழி, திருமலை பிரதேச செயலர் பிரிவில் இலுப் பைக்குளம் மற்றும் கன்னியா ஆகிய கிராமங்கள் ஊடாக மின் கம்பிகள் செல்கின்றன. ஆனால் இக்கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்கப்படவில்லை. எனவே இக்கிராமங்களுக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்” என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைட்ணசிங்கம் அமைச்சரைக் கேட்டுள்ளார்.(25)

**செப்-27முதல் ஒக்-01 வரை**

## முன்பள்ளிச் சிறுவர்வாரத்தை நடத்த தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையம் ஆகியன முன்பள்ளிச் சிறுவர் வாரத்தை வடக்கு கிழக்கு மாகாணத்தில் செம்டம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 01.ஆம் திகதிவரை நடத்தவிருக்கிறது.

மூன்று இடங்களையும் சேர்ந்த முன்பள்ளிச் சிறுவர்களை உள்ளடக்கியதாக சிறுவர்வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. திருகோணமலை மாவட்டத்திலும் முன்பள்ளிச் சிறுவர் வாரத்தை ஒட்டி மாவட்ட நிலையில் முன் பள்ளி சிறார்கள் பங்கேற்றும் விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்வுகளையும், சிரமதான நிகழ்வுகளையும் நடத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்று திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (25)

# கனடா பொங்குதமிழ் நிகழ்வை குழப்ப ஆனந்தசங்கரி முயற்சி

கனடா ரொரண்டோ நகரில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுகளைக் குழப்பும் முகமாக சிங்கள இனவாதிகள் மேற்கொண்டுவரும் பிரச்சாரங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக ஆனந்தசங்கரி கனேடிய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

தாய்லாந்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் "ஏசியன் ரிபூன்" இணையத்தளம் இக் கடிதத்தைப் பிரசுரித்துள்ளது. இது விடுதலைப் புலிகளின் ஒரு செயற்பாடே என்றும், இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் ஆனந்தசங்கரி கனேடிய அரசிற்கும், அதிகாரிகளுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொங்கு தமிழ் என்ற போர்வையில் தமிழ் மக்களது உணர்வுகளைத் தட்டி எழுப்பி அமைதி முறையில் இனச்சிக்கலுக்கு தீர்வு காணும் முயற்சியை மழுங்கடிப்பதே அதன் உண்மையான நோக்கம் என்றும் அந்தக் கடிதத்தில் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தனிப்பட்ட செலவொன்றினை மேற்கொண்டு கனடாவில் தங்கியிருக்கும் ஆனந்த சங்கரி கனேடியப் பொலிஸ்மா அதிபர், ரொரண்டோ நகர மேஜர், கனேடியத் தூதுவர், மாகாண அரசு ஆகியோருக்கு எழுதப்பட்ட இக் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக மேற்படி இணையத் தளம செய்தி வெளியிட்டுள்ளதுடன், அக்கடிதத்தையும் பிரசுரித்துள்ளது.

சின்னபாலாவின் பெயரால் ஈ.பி.டி.பி.யினர் கனடாவில் நடத்திய கண்டனக் கூட்டத்திலும் ஆனந்த சங்கரி கலந்து கொண்டுள்ளதாக அவர்களின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கடந்த புதன்கிழமை சனாதிபதியின் தலைமையில் கூடிய அமைச்சரவையில் மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான யோசனையை மின்சாரத்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த முன்வைத்தார்.

30இற்கு அதிகமான மின்சார அலகுகளின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சர் பரிந்துரை செய்த போதும், சனாதிபதி அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.அவ்வாறு கட்டணங் கள் அதிகரிக்கப்படுமானால் சுமார் 20 இலட்சம் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவர். எனவே 91 அலகுகளுக்கும், 180 அலகுகளுக்கும் இடையிலான அலகுகளுக்கு 7 வீத அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அத்துடன் 180இற்கு மேலான மின்சார அலகுகளுக்கான மின்சாரக் கட்டணங்கள் 4 வீதத்தால் அதிகரிக்கப்படவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.இதன் காரணமாக சுமார் 8 இலட்சம் பாவனையாளர்களே பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்க ஜப்பான் உறுதி

(டோக்கியோ)

இலங்கைக்கு அதிகளவு தொழில் நுட்ப ஒத்துழைப்பு வழங்கப்படுமென ஜப்பான் உறுதியளித்துள்ளது.

அண்மையில் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த ஜப்பானியப் பொருளாதார, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# கொத்மலை நீர்மின் மைய வேலை ஆரம்பிக்கப்படாமை பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது

## - இல.மி.சபை முகாமையாளர் தெரிவிப்பு

மேல் கொத்மலை நீர்மின் மையம் ஆரம்பிக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள போதும், அது தற்காலிகமாக நிறுத்திப்பட்டுள்ளமையானது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அதேநேரம் நுரைச்சோலை அனல் மின்மையமும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பொது மக்கள் வலியுறுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இந்த இரண்டு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் நாட்டில் பாரிய மின்சார நெருக்கடி நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

இலங்கையில் முதன் முதலாக ஆரம்ப்பிக்கபட்ட நோட்டன் விமல சுரேந்திர நீர்மின் மையத்தின் ஸ்தாபகரான விமலசுரேந்திரவின் 130ஆவது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது

இதனை முன்னிட்டு விமலசுரேந்திர நீர்மின்மையத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள விமலசுரேந்திரவின் சிலையை திரை நீக்கம் செய்து வைத்த பின்னர் மின்சார சபையின் முகாமையாளர் ஊடகங்களுக்கு செவ்வியளித்த போதே இவ்வாறு தெரி வித்தார். நாட்டில் மின்சார அலகு ஒன்றை உற்பத்தி செய்ய 9 ரூபா 50 சதம் செலவு ஏற்படுகிறது.

எனினும் அந்த அலகு பாவனையாளாகளுக்கு 4ரூபா70 சதத்துக்கு விற்பனை செய்யப் படுகிறது

இதன் காரணமாக நாள் ஒன்றுக்கு மின்சார சபைக்கு 30 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகிறது. இதனைச் சீர் செய்யும் முகமாக மின்சார சபையால் விரைவில் சில மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகவும் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்தார். (32)

# ஐ.தே.கட்சி வசமிருந்த நாத்தாண்டிய பி.சபை கலைப்பு

புத்தளம் நாத்தாண்டிய பிரதேச சபை கலைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவிலான சுயேட்சைக் குழுவே இங்கு பதவியில் இருந்து வந்தது. எனினும் இந்த பிரதேச சபையில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பதாகக் குற்றம் சுமத்தி வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் அத்துல விஜயசிங்க நேற்றுமுன்தினம் இரவு சபையை கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

அதேநேரம் நேற்றுமுன்தினம் மாலையளவில் பிரதேச சபையின் தலைவி ரமணி ஜசிந்தா தேனுவர தமது பதவியில் இருந்து விலகியமை இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில் இந்தப் பிரதேச சபையின் உறுப்பினர் நிலையில் இருந்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் 8 உறுப்பினர்கள் ஊழல்களைக் காரணம் காட்டி விலகியிருந்தனர்.

# பெற்றோலியக்கூட்டுத்தாபனம் குறித்து அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துக!

## – பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் தொ. சங்கம் கோரிக்கை

திறைசேரியின் வசமுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்வது தொடர்பிலான நிலைப்பாட்டை தெளிவுப்படுத்துமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் தொழிற்சங்கம் கேட்டுள்ளது

இது தொடர்பாக அந்தத் தொழிற்சங்கம் தமது மாற்று யோசனைகளை நிதியமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. சனாதிபதி கேட்டமைக்கு அமைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கான யோசனைகள் இதில் அடங்கியுள்ளதாக அந்தத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது

ஒரு போதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடையும் நிறுவனமாக மாறுவதற்கு வாய்ப்பில்லை எனவும் அந்தத் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அரசாங்கத்திடம் இருந்து வர வேண்டிய பல மில்லியன் ரூபாய்கள் கிடைக்காத போதும் நிறுவனத்தை நட்டமின்றி நடத்திச் செல்ல முடியும் எனக் குறிப்பிட்ட தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது (32)


வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

## பணிநிலை வேண்டுகை

டீசல் எஞ்சின் திருத்துனர் (Diesel Engine Mechanics)

ஐந்து வருடங்களுக்குக் குறையாத டீசல் எஞ்சின் திருத்தும் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை.

குறிப்பு:-

★ கனரக வாகனத் திருத்துனர்களுக்கும் (Heavy Vehicles Mechanics), கைற்றோலிக் திருத்துனர்களுக்கும் (Hydraulic Mechanics) முன்னுரிமை வழங்கப்படும்.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :-

வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
NORTHEAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION
(NECTEC)
கண்டிவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (கிளி/ மத்திய கல்லூரிக்கு அருகாமையில்)
T.P.No: 021 2285917 (5109)




## 3ஆம் ஆண்டில் நீங்கா நினைவுடன்

கடற்புலிகளின் துணைத் தளபதி
லெப். கேணல்
இரும்பொறை மாஸ்ரர்
சிவராசா கலைச்செல்வன்
தம்பலகமம்-திருமலை

மகனாய் :- 1972-09-01
மாவீரனாய் :- 2001-09-16

கனவுகளுக்குள் தொலைந்து..
நிஜத்தினால் - நாம்
காயப்பட்ட போதும்!
உங்கள் உணர்வுகள் எல்லாம்...
இலட்சியங்களாய் உலாவரட்டும்;
இதற்குத் துணையாய் - நாம்
இருப்போம் என்றும்!

கணேஷ்திட்டம்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்,

(4135)

## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சகல குளங்கள் தொடர்பானது.

1) குளக்கட்டிற்கு அருகாமையில் உள்ள குளங்களின் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள்.

2) வாய்க்காலின் அருகாமையில் உள்ள வாய்க்காலின் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள்.

3) நீர்ப்பாசனத் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிகள்.

மேற்படி நிலங்களில் எவரும் குடியேற வேண்டாம் என்றும், ஏற்கனவே குடியேறியவர்கள், கடைகள் அமைத்தவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பொதுமக்களுக்கு மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை எவரும் விலைக்கு வாங்குதலோ அல்லது விற்றலோ கூடாது எனவும், அத்துடன் இதற்கான அனுமதிப்பத்திரம் வழங்க நீர்ப்பாசனத் திணைக்களம் சிபார்சு செய்யமாட்டாது என்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ந.கந்தசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப்பிரிவு.

(சி-10224)

# பொடோ சட்டத்தை நீக்க மத்திய அமைச்சரவை முடிவு

(டில்லி)

**தீவிரவாதத் தடுப்புச்சட்டமான பொடோச்சட்டத்தை நீக்குவதென இந்திய மத்திய அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது. பிரதம மந்திரி மன்மோகன்சிங் தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை இத்தீர்மானத்தை மேற்கொண்டது.**

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக கடந்த தேசிய சனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட 'பொடோ' சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்ததைத் தொடர்ந்து, அந்த சட்டத்தை இரத்துச் செய்வதாக சமீபத்தில் மத்திய அரசு அறிவித்தது.

ஆனால் நடந்து முடிந்த பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது தினசரி சபையில் அமளி ஏற்பட்டதால் பொடோ சட்டத்தை இரத்துச் செய்வதற்கான பிரேரணையை மத்திய அரசால் தாக்கல் செய்ய முடியவில்லை.

இதனால் பொடோ சட்டம் காலாவதியாவது வரை காத்திருக்காமல் அவசர சட்டம் ஒன்றை கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி 1967 ஆம் ஆண்டின் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்து. இந்த அவசர சட்டத்திற்கு சட்ட அமைச்சகம் ஒப்புதல் அளித்துவிட்டது.

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அவசரக் சட்டம் பரிசீலிக் கப்பட்டது.

தீவிரவாத இயக்கங்களின் செயற்பாடுகளை ஒடுக்க வேண்டும் என்றும், அவற்றுக்கு நிதி உதவி கிடைப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் ஐ.நா.பாதுகாப்புச் சபை ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே மத்திய அரசு பிறப்பிக்கும் அவசர சட்டம் அந்த தீர்மான அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

# மார்க்சிஸ் கம்யூனிஸ்டுகளுடன் சமரசம் செய்ய அரசு முயற்சி

(புதுடில்லி)

மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சருமான ஜோதி பாசுவிற்கு பிரதமர் மன்மோகன் சிங் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்துள்ளார்.

மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் தலைமைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள புதுடில்லி செல்லும் ஜோதி பாசுவிற்கு இந்த அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாக மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

குறைந்தபட்ச பொதுச் செயற் திட்டத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு முறையாக செயற்படுத்தவில்லை என்று அண்மையில் ஜோதிபாசு குறை கூறியிருந்தார் சில பொருளாதாரத் திட்டங்கள், மத்தியதிட்டக்குழுவின் வெளிநாட்டைச் சேர்ந்த நிபுணர்களைச் சேர்ந்திருப்பது என்பவை குறித்து அவர் ஆட்சேபம் தெரிவித்திருந்தார். இது குறித்தே பிரதமர் கலந்தாலோசிக்க ஜோதிபாசுவை அழைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

# மக்களவைத் தேர்தலில் சோனியாவை தனிப்பட்ட முறையில் விமர்சிக்கவில்லை

*–முதலமைச்சர் ஜெயலலிதா கூறுகிறார்–*

(சென்னை)

மக்களவைத் தேர்தலின் போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளிநாட்டவர் எனும் பிரச்சினையை எழுப்பியது தனிப்பட்ட முறையில் அல்ல என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தேர்தல் நேரத்தில் இது போன்ற பிரச்சினைகளை எழுப்புவது இயற்கை என்று கூறியுள்ளார். ஆனால் இதனைத் தனிப்பட்ட முறையிலான தாக்குதல் என்று எடுக்கமுடியாது. என்று கூறிய ஜெயலலிதா நான் ஏன் அவரைத் தனிப்பட்ட முறையில் விமர்சிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சோனியா காந்தி அறிவித்துள்ளமையினை ஜெயலலிதா பாராட்டியுள்ளார். இது ஒரு நல்ல முடிவு என்று கூறிய ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கையும் பாராட்டியுள்ளார்.

தேசிய சனநாயகக் கூட்டணியில் அ.இ.அ.தி.மு.க தற்போது இடம்பெறவில்லையென்று தெரிவித்த அவர் தமது கட்சியினரின் அழைப்பின் பேரிலேயே தேசிய சனநாயகக் கூட்டணியில் பங்கேற்பதாகவும், இந்தக் கூட்டணிக்குப் பிரச்சினையடிப்படையிலேயே ஆதரவு அளிக்கப்படுவதாகவும் கூறியுள்ளார். கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கவும், மீன்வலைகளை உலர்த்தவும் வசதியாகக் கச்சதீவை நிரந்தரக் குத்தகைக்கு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி பிரதமர் மன் மோகன் சிங்கிடம் முதலமைச்சர் ஜெயலலிதா மனுவொன்றையும் கையளித்துள்ளார்.

# மண்டேலாவை அப்துல் கலாம் சந்தித்துப் பேச்சு ராவல்தீவு சிறையையும் சென்று பார்த்தார்

(புதுடில்லி)



இந்திய குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் நேற்று முன்தினம் தென்னாபிரிக்கத் தலைநகரில், அந்நாட்டின் முன்னாள் சனாதிபதி நெல்சன் மண்டேலாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு விடுதலை பெற்றுத் தந்தவரும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நிறுவனருமான நெல்ஷன் மண்டேலாவை சந்தித்தது தமது நினைவில் நீங்காது நிற்கும் என்று அப்துல்கலாம் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்கா அந்நியர் ஆட்சியில் இருந்தபோது நெல்ஷன் மண்டேலா 27 ஆண்டு களாக சிறை வைக்கப்பட்டிருந்த ராவல் தீவு சிறையைப் பார்க்க வேண்டுமென்ற தனது நீண்ட கால ஆவல் நேற்று முன்தினம் நிறைவேறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது தென்னாபிரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கு, இந்தியா வழங்கிய உதவிகளை நன்றியுடன் நினைவு கூறுவதாகவும், இந்தியா, தென்னாபிரிக்காவிற்கு தொடர்ந்து உதவி வருவதாகவும் மண்டேலா கூறியுள்ளார்.

# அனைத்துப் பாடசாலைகளிலும் தீயணைப்புச் சாதனங்கள்

**-உச்ச நீதிமன்றம் உத்தரவு**

(புதுடில்லி)

இந்தியாவிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தீ தடுப்புச் சாதனங்கள் உரிய முறையில் தேவையான அளவு இருப்பதை உறுதி செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அனைத்து மாநில அரசுகளுக்கும், யூனியன் ஆட்சிப்பகுதி அரசுகளுக்கும் நேற்று துண்டுப்பிரசுரம் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டில் அண்மையில் கும்பகோணத்தில் சுமார் 100 குழந்தைகளின் உயிரிழப்பிற்கு காரணமான பாடசாலைத் தீ விபத்து போன்று நாட்டின் ஏனைய இடங்களிலும் தீ விபத்து நிகழாது தடுக்க வேண்டுமென்று கோரும் பொதுநல மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து; உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

(புதுடில்லி)

தமிழைச் செம்மொழியாக இந்திய மத்திய அரசு நேற்று அறிவித்துள்ளது. இதன் மூலம் தமிழுக்கு செம்மொழி என்னும் தகுதி கிடைத்துள்ளது. தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வந்தனர்.

இதன்படி அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இனி தமிழ் மொழியைப் பயில முடியும் என்பதும் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தொல்காப்பியம், திருவள்ளுவர் பெயர்களில் விருதுகள் மத்தியரசால் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் ஆதரிக்கும்

**-சோனியா காந்தி-**

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உத்தரப் பிரதேசத் திலுள்ள அவரது சொந்தத் தொகுதியான ரேபரேலியில் 3 நாள் சுற்றுப்பயணம் தொடங்கியுள்ளார். தொகுதி முழுவதும் அவர் சுற்றிவந்து சாலையோரம் காரை நிறுத்தி மக்களைச் சந்தித்து அவர்களின் குறை கேட்டு வருகிறார்.

உ.பி.யில் சட்டம்- ஒழுங்கு நிலை சரியில்லை என்று முதல்வர் முலாயம்சிங் மீதும் அவர் அதிருப்தி தெரிவித்திருந் தார்.

இந்த நிலையில் சோனியா நேற்று முன்தினம் நிரூபர்களிடம் கூறியதாவது; உ.பி.யில் சட்டம் ஒழுங்கு நிலை சரியில்லாத போதிலும், முலாயம் அரசுக்கு காங்கிரஸ் வெளியில் இருந்து தொடர்ந்து ஆதரவு தரும். ரேபரேலி பாராளுமன்றத் தொகுதிக்கு சாலை வசதி, மின்வசதி செய்து தருவதில் மாநில அரசு பராபட்சம் காட்டுகிறது. இதுபற்றி மத்தியரசு மாநில அரசுடன் பேசித் தீர்வு ஏற்படுத்துவேன் எனக்கூறினார்.

**விசுவமடுக்குளம் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு**

**முல்லை.பரந்தன் வீதியில் சுண்டிக்குளம் சந்திக்கு அருகாமையில் சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் 15.09.2004, புதன் கிழமை நண்பகல் 12 மணி சுப முகூர்த்த வேளையில் சங்கத்தின் செயலாளர் திரு.வைரவன் சின்னத்தம்பி அவர்களால் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.**

**இதனை அடுத்து விற்பனை நிலையம் அமைந்துள்ள அரை ஏக்கர் காணியில் பனை, தென்னை, மீள் நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

இ.பகவத்சிங்,
பொதுமுகாமையாளர்,
விசுவமடுக்குளம் ப.தெ.வ.அ.கூ. சங்கம
விசுவமடு.

**தகவல்:- முகாமையாளர்.**

(5110)

**பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி**

உதயம் 17 - 07 - 1950



மறைவு 21 - 08 - 1993

**திரு. நல்லையா செல்வராசா**

[ஆசிரியர்]

அப்பா அப்பா என்று நாம்
ஆசையோடு கூப்பிட
எப்போதுமே அணைத்திடும்
அப்பா எங்கு சென்றீரோ

பற்று எமக்கு இனியேது
பதறி அழுதே துடிக்கிறோம்
உற்ற துணைகள் எமக்கில்லை
ஓயாத் துயரம் கொண்டோம் நாம்

அழுதே அழுதே கண்ணீர் வடிக்கும்
அன்புப் பிள்ளைகளைக் காண்பதற்கு
எழுந்து எப்போ வருவீரோ
எங்கள் துயரம் துடைப்பீரோ.

(சி-9197)


தகவல்-
எஸ்.செல்வகரன்

தங்கள் பிரிவால் துயருறும்,
**மனைவி, பிள்ளைகள்.**

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004

# நேற்றைய போட்டி மழையால் பாதிப்பு இங்கிலாந்து அணிக்கு நெருக்கடி

International Cricket Council



ஐ.சி.சி கிண்ணத்துக்கான இங்கிலாந்து-சிறிலங்கா அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற போட்டி காலநிலை சீரின்மையால் முற்றாகக் கைவிடப்பட்டு இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிறிலங்கா அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து இங்கிலாந்தைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 32 ஓவர்கள் நிறைவில் 3 முக்கியமான விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மூன்று விக்கெட்டுக்களும் மொத்த ஓட்டம் 80 ஆக இருக்கின்ற போது வீழ்த்தப்பட்டது.

ரெஸ்கொதிக் 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காதும், அன்ரூபிளின்டொப் 21 ஓட்டங்களை ஆட்டமிழக்காதும் பெற்றிருந்தனர்.

பிளின்டொப் ஒரு நாள் போட்டி யின் ஓட்டக் குவிப்பு வேகம் 91 இற்கு அதிகமாக இருக்கின்ற போதிலும இந்தப் போட்டியில் 39 பந்துகளை எதிர் கொண்டு 21 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார்.




இதே வேளை இந்தப் போட்டியில் சிறிலங்கா அணி களத்தடுப்பில் பலவீனமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக மூன்று முக்கியமான இலகுவான பிடிகளை நழுவவிட்டது.

இதில் அன்ரூபிளின்டொப், ரெஸ்கொதிக், அன்ரூஸ்ரோஸ் ஆகியோர் தப்பிக் கொண்டனர். இதில் அன்ரூஸ்ரோஸ் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

எனவே இன்று களத்தடுப்பில் பிரகாசித்தால் சிறிலங்காவின் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

இருந்தாலும் இந்தப் போட்டியில் வெற்றி பெறககூடிய அதிகமான வாய்ப்பு இங்கிலாந்து அணிக்கே இருப்பதாக ஆரம்பத் தில கிரிக்கெட் வர்ணனையாளர்கள் அனைவரும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருந்தாலும்



சிறிலங்கா பந்து வீச்சில் இங்கிலாந்தை திணறடித்துள்ளது. பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்டாலும் களத்தடுப்பில் பலவீனமாகவே இருந்துள்ளது. இன்று அதை திருத்திக் கொள்ளும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணி அவுஸ்திரேலியாவுடன் அரையிறுதியில் மோதும்.

## 'சச்சின் இல்லாதது சாதகம்' பாக். தலைவர் இன்சமாம் மகிழ்ச்சி



"இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் இல்லாதது எதிரணிக்கு சாதகமான விடயம்'' என்று மகிழ்ச்சியடைகிறார் பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் உல் ஹக்.

மினி உலகக்கோப்பை கிரிக்கெட்டின் மிக முக்கியமான மிகவும் எதிர்பார்க்கப்படும் மோதல் நாளை நடக்க இருக்கிறது. பேர்மிங்காம், எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் நடக்கும் இந்த பெரிய மோதலில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் சந்திக்கின்றன. இரு அணிகளுக்குமே இது முக்கியமான போட்டி. இதில் வெற்றி பெற்றால் அரையிறுதிக்கு முன்னேறலாம். இல்லையென்றால் வீட்டுக்குத் தான்.இந்தப் போட்டி பற்றி பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவிக்கையில் இந்தியாவுக்கு எதிரான போட்டியை நம்பிக்கையுடன் அணுகுகிறோம். இந்தப் போட்டி முடிவை யாரும் கணிக்க முடியாது. அன்றைய தினத்தில் சிறப்பாக விளையாடும் அணியே வெற்றி பெறமுடியும். எங்களைப் பொறுத்த வரை பந்து வீச்சில் பலமாக இருக்கிறோம். வேகப்பந்து வீச்சாளர்கள் தவிர கென்யாவுக்கு எதிரான போட்டியில் சுழற்பந்து வீச்சாளர்கள் அப்ரிடி,சோயப் மாலிக் இருவரும் பிரமாதமாகப் பந்து வீசினார்கள்.

வேகப்பந்து வீச்சு, சுழற்பந்து இரண்டும் நன்றாக இருப்பதால், இந்தியாவைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. தவிர இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் இல்லை. அவர் மிகச் சிறந்த வீரர். அவர் இல்லை என்பது இந்தியாவை எதிர்த்து ஆடும் அணிகளுக்கு சாதகமான ஒரு விடயம். நாங்களும் அதைப் பயன்படுத்திக் கொள்வோம். என்று தெரிவித்துள்ளார்.

## புரூட்ஸ் ரீட் அறிவுரை

பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டத்தை நான் அதிகம் பார்த்ததில்லை. ஆகவே அவர்கள் விளையாடிய போட்டிகளின் வீடியோக் காட்சிகளைப் பார்த்து புதிய வியூகம் வகுத்து வருகிறேன் என இந்திய பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சியளித்து வரும் அவுஸ்திரேலியாவின் புரூட்ஸ்ரீட் தெரிவித்துள்ளார்.

அப்ரிடி போன்ற அதிரடி ஆட்டக்காரர்கள் ஆடும்போது பரிசோதனை முயற்சி வேண்டாம் என்று இந்திய பந்து வீச்சாளர்களுக்குக் கூறியுள்ளேன் எனக் கூறிய அவர்.

நேர்த்தியானபந்து வீச்சு மூலமே அவரைக் கட்டுப்படுத்த முடியும் எனவும்

முதல் 15 ஓவர்களில் விக்கெட்டுக்களை எடுக்க வேண்டும் என்று பரிசோதனை முயற்சி செய் வது ஆபத்து எனவும்,

முதல் 15 ஓவர்களில் ஓட்டங்களை கட்டுப்படுத்துவதே முக்கியம் அப்படிச் செய்தால் ஓட்டத்தை அதிகரிக்க வேண்டிய தேவை எதிரணிக்கு ஏற்படும். அதன் பின் தானாக விக்கெட்டுக்கள் வீழும் எனவும் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு ஸ்ரீட் வலியுறுத்தியுள்ளார்.

## இந்தியாவுக்கு மற்றுமொரு இழப்பு; அவுஸ்.டெஸ்ட் தொடர் பாலாஜி பங்கேற்கார்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்திய அணி கலந்து கொள்ளும் டெஸ்ட் சுற்றுப்போட்டியில் இந்தியாவுக்கு மற்றுமொரு இழப்பு ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வைத்து இந்திய அணி கலந்துகொண்ட போட்டியில் பந்து வீச்சில் மாத்திரமல்லாது துடுப்பாட்டத்திலும் பலரைத் தன்வசம் ஈர்த்த வேகப்பந்து வீச்சாளர் பாலாஜியின் உபாதை இந்த டெஸ்ட் தொடரில் விளையாட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அவர் இன்னும் இரண்டு மாதங்கள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வெடுக்க வேண்டும் என்று பாலாஜியின் உடலியலாளர் தெரிவித்துள்ளார்.

அவர் ஒன்று இரண்டு மாதங்களுக்கு ஓய்வெடுத்தாலே, பின்னர் விளையாட முடியும் என ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் உபாதையில் விளையாட முடியாது உள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வழக்கை விரைந்து முடிக்க வக்கீல்களுக்கு பி.சி.சி.ஐ உத்தரவு

கிரிக்கெட் ஒளிபரப்பு விவகாரத்தில் மும்பை உயர் நீதிமன்றத்துடன் ஒருங்கிணைந்து விரைவில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருமாறு தனது வக்கீல்களுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்த நாலு ஆண்டுகளில் நடைபெறும் போட்டிகளில் ஒளிபரப்பு உரிமையை வழங்கும் விவகாரத்தில் மும்பை உயர் நீதிமன்றம் முடிவெடுக்கும் வரை கிரிக்கெட் சபை யாருக்கும் உரிமையைத் தரக்கூடாது என மும்பை உயர் நீதிமன்றம் புதன்கிழமை கேட்டுக்கொண்டிருந்தது.

## அணித்தலைவராக நீடிக்க மாட்டேன்

— டிக்கோலா




நாடு திரும்பியதும் முதல் வேலையாக எனது அணித் தலைவர் பதவியைத் துறப்பேன் என கென்ய கிரிக்கெட் அணித் தலைவர் லட்ச் டிக்கோலா விரக்தியுடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: உலகக்கோப்பைத் தொடரில் அரையிறுதிவரை முன்னேறிய அந்த அணி இப்போது மினி உலகக் கோப்பையில் படு கேவலமாகத் தோற்று வெளியேறுகிறது. "நாடு திரும்பியதும் முதல் வேலையாக எனது அணித்தலைவர் பதவியை உதறிவிடுவேன். கென்யா அணித் தலைவராக திருப்தியாக சாதித்து விட்டேன். இனி யாராவது இளைஞர் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளட்டும். நான் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் அணியில் தொடர்ந்து நீடிப்பேன்" என்கிறார் டிக்கோலா.

## சச்சின் இல்லாதது மிகப் பெரும் பின்னடைவே ஆனாலும் இந்திய அணி சாதிக்கும்

— பிரெட்லி



மினி உலகக் கோப்பை கிரிக்கெட்டில் ஒவ்வொரு நாளும் இவ்விரு அணிகள் மோதிக்கொண்டிருந்தாலும் ஒட்டுமொத்தமாக அனைவரும் எதிர்பார்க்கும் போட்டி என்றால் சந்தேகமே இல்லாமல் அது இந்தியா-பாகிஸ்தான் போட்டிதான் என அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அவ்விரு நாடுகளில் மட்டுமல்லாமல் இங்கும் நாங்கள் அனைவரும் அந்தப் போட்டியைத் தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். இரு அணிகளுமே கென்யாவை சுலபமாக வென்று தங்கள் மீதான எதிர்பார்ப்புக்களை இன்னும் அதிகப்படுத்தியுள்ளன. இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் இல்லாதது மிகப்பெரிய பின்னடைவு தான். அதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயம் கென்யாவுக்கு எதிராக அவர்கள் விளையாடியதைப் பார்த்த போது சச்சின் இல்லாமலும் இவர்கள் சாதிக்கமுடியும் என்று தோன்றுகிறது. கடந்த ஆண்டு உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் நாங்கள் இருஅணிகளும் சந்தித்ததை மறக்க முடியாது. இந்த மினி உலகக் கோப்பை இறுதிப் போட்டியும் எங்களுக்கிடையிலான போட்டியாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் என்றார்




## அவுஸ். அணிக்கு முதலிடம்

சர்வதேச ஹொக்கிக்குழு தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலிய ஆடவர் ஹொக்கி அணி முதலிடத்திற்கு உயர்ந்துள்ளது.

அவுஸ்திரேலியா ஒலிம்பிக் போட்டிக்கு முன்னர் வரை மூன்றாவது இடத்தில் இருந்தது.அதே சமயம் இதுவரை முதலிடத்தில் இருந்த ஜேர்மனி நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற அணி ஜேர்மனி.வெள்ளிப் பதகத்தை வென்ற நெதர்லாந்து 2ஆவது இடத்தைப் பிடித்துளளது.


## வீரப் பிரசுவ ஐ.வி.க.நடாத்தும் கால்பந்துப் போட்டி அரையிறுதி, இறுதிப்போட்டிகள் இன்று

அடம்பன் வீரப்பிரசவ. ஐக்கிய விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட லீக் முறையிலான உதைப் பந்தாட்டப் போட்டியின் நிறைவில் ஒவ்வொரு அணிகளும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப் படையில் 4 அணிகள் தெரிவு செய்யப்பட்டு விலகல் முறையில் (நொக் கவுட்) அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இன்று காலை 8.30 மணிக்கு தேசியக் கொடி யேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில்

1ஆவது அரையிறுதியில் சென் தோமஸ் ஆண்டான்குளம் அணியும், விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

2ஆவது அரையிறுதியில் வட்டக் கண்டல் சுடரொளிவி.க அணியும், காத்தான்குளம் சென் யோசப் கழக அணியும் மோதுகின்றன.

அரையிறுதியில் தோல்வி பெறும் அணிகள் 3ஆம் இடத்திற்கான போட்டியிலும், வெற்றி பெறும் அணிகள் 1ஆம், 2ஆம் இடத்திற்கான போட்டியிலும் மோதுகின்றன. 4 போட்டிகளும் ஒரே தினத்தில் மேற்குறிப்பிட்ட திகதியில் மன்/வட்டக்கண்டல் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



## சிந்தனைக்கு

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றி நடைபோட முடிந்த தென்றால் அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான். என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 18-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சனாதிபதியின் பங்களிப்பென்ன?

"ஏ-9 பாதையைத் திறந்து வடபகுதி மக்களுக்கு வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்துள்ளதோடு, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளை முன்னெடுத்தும் வருகின்றது. ஆனால் விடுதலைப்புலிகளோ சனாதிபதி மீதும் சமாதானத்தின் மீதும் நம்பிக்கை அற்றவர்களாகச் செயற்பட்டு வருகின்றனர் என்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் குற்றச்சாட்டுக்கள் எத்தனை தூரம் நியாயப்பாடானவை? பொருத்தப்பாடானவை?.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் முதலில் கேட்கப்பட வேண்டிய கேள்வியாக இருப்பது ஏ-9 பாதை திறப்பிற்கு அவர் ஆற்றிய பங்கு, பணி என்ன? அதாவது அவரின் பங்களிப்பென்ன? ஏ-9 பாதை திறக்கப்பட்டதானது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்திலேயே ஒழிய, பொ.ஐ.முன்னணி ஆட்சிக் காலத்திலோ அன்றி தற்போதைய ஐ.ம.சு முன்னணி ஆட்சிக்காலத்திலோ அல்லது அப்போது பாதுகாப்பமைச்சராக இருந்தவரும், ஐ.தே முன்னணி அரசாங்கத்தைச் சேர்ந்தவரே.

சிலவேளை தான் முப்படைகளின் தளபதியாகவும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகவும் இருந்தமையால் அதனைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் எனச் சனாதிபதி சந்திரிகா வாதிட முற்படலாம். ஆனால் அன்றிருந்த அரசியல்-இராணுவ சூழ்நிலையில் அவரால் அத்தகையதொரு நடவடிக்கையை மேற்கொள்ளத் தக்கதாக இருக்கவில்லை என்பதே உண்மையாகும்

அவ்வாறானால் ஐ.ம.சு முன்னணி ஆட்சிக்கு வந்த் பின்னர் பாதையை மூடியிருக்கலாம் தானே என்ற கேள்வியும் எழ வாய்ப்புண்டு. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடரப் போவதாகச் சர்வதேச சமூகத்திற்குக் காட்டிக்கொள்ள விரும்பும் சனாதிபதி சந்திரிகாவால், பாதையை மூடி யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை.

அடுத்ததாகச் சனாபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்காக மேற்கொண்ட அர்ப்பணிப்புத்தான் என்ன? நோர்வே அரசை சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தானே அழைத்ததாக அவர் கூறிக் கொள்ளலாம். ஆனால் அன்றிருந்த அரசிற்குப் பாதகமான இராணுவச சூழ்நிலையே நோர்வேயை அழைக்க அவரைத் தூண்டியதே தவிர சமாதானத்தில் அவர் கொண்ட ஆர்வத்தினால் அல்ல.

இதற்குமப்பால் சமாதான முயற்சிகளுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளைவித்த இடையூறுகளே அதிகமானதாகும். ஐ.தே.முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து அது நடாத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகள் வரையில் அனைத்திற்கும் எதிராகவே சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் இருந்தன.

இதில் ஒரு அங்கமாக பாதுகாப்பமைச்சு மீது தொடர்ச்சியான பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உண்மைக்கு மாறான காரணங்கள் அடிப்படையில் பாதுகாப்பமைச்சைப் பறித்தெடுத்தார். அத்தோடு போர் நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான செயற்பாட்டிலும் அவரது கவனம் சென்றது. சனாதிபதிக்கு விசுவாசமான சில தளபதிகள், அதிகாரிகள் போர் நிறுத்தத்திற்கும் இடையூறு விளைவித்தனர்.

இதேசமயம் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தேக்க நிலையில் இருந்து விடுபட்டு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம் என்ற நிலை உருவாகி வருகையில், சனாதிபதி சந்திரிகாவால் ஐ.தே.முன்னணி அரசாங்கம் கலைக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகளும் முடக்கப்பட்டன.

இவை ஒரு புறம் இருக்க விடுதலைப்புலிகள் அமைப்பினுள் குழப்பத்தை விளைவிக்கும் வகையிலும், பலவீனப்படுத்தும் வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசாங்கம் ஈடுபட்டது. இதன் விளைவாகக் கிழக்கில் பதட்ட நிலை உருவாவதற்கும் அரசாங்கம் காரணமாகியது. அதாவது புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரகாரம் மட்டு.மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்புக்கள் கைவிடப்படும் நிலை வரை நிலைமை மோசமடைந்தது.

இவ்வாறான நிலைமை ஒரு புறம் காணப்படச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நிலையிலும் அரசாங்கம் இல்லை. விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை நகல் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதை அரசாங்கம் விரும்பவில்லை. மாறாக புதிய நகல் திட்டம் தயாரித்தல், தேசிய ஆலோசனைக் கவுன்சில் ஒன்றை உருவாக்குதல் போன்ற காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கையிலேயே சனாதிபதி இறங்கியுள்ளார்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்கு ஆற்றிய பங்களிப்புத்தான் என்ன? தனது நாட்டுமக்கள் எனக் கூறிக்கொள்ளும் வடபகுதி மக்களுக்கு பாதையைத் திறந்து போக்குவரத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதா? அன்றி சமாதானப்பேச்சுவார்த்தைக்குத் தயாரான ஐ.தே முன்னணி அரசாங்கத்தை கலைத்ததா? அன்றி சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காது காலத்தை இழுத்தடித்து வருகின்றமையா? அன்றி யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறான வகையில் கிழக்கில் புலிகளுக்கெதிரான ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு கொடுப்பதா? இதில் எதனைச் சனாதிபதி சமாதானத்திற்கு ஆற்றிய பங்களிப்பெனக் கூறமுடியும்? புலிகளோ, தமிழ் மக்களோ சனாதிபதி மீது நம்பிக்கைவைக்க எதனை அடிப்படையாகக் கொள்ள முடியும்?

# புலிகளின் ஆலோசனை குறித்து முடிவுக்கு வர முடியாத அரசு

# ஏனையகட்சிகளின் ஆலோசனை கோருவது பயனற்றது

### -ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தெளிவான இணக்கப்பாட்டுக்கு வரமுடியாதுள்ள சந்திரிக்காவின் அரசாங்கம் ஏனைய கட்சிகளின் கருத்தை கோருவது பயனற்றது என ஐ.தே.கட்சி பா.உ. ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் உட்பூசல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் நடைபெறும் என்பது கனவாகும் நிலையே அதிகமாகத் தோன்றியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்

சமாதானப் பேச்சுக்கள் விரைவில் நடத்தப்படவேண்டும். எமது நிலைப்பாடும் அதுவே. டோக்கியோ ஒஸ்லோ ஒப்பந்தத்த்தின அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு நாம்எதிர்ப்பு காட்டமாட்டோம் ஆயினும் கூட்டணி அரசியல் சந்திரிகாவுக்கும் ஜே.வி.பி.யினருக்கு மிடையே புரிந்துணர்வு இல்லாத தால் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிப்பது வெறும் கனவாகலாம் என்று அவர் கூறினார்.

# அத்தியாவசியப் பொருள் விலை அதிகரிப்பிற்கு நிவாரணம் வழங்குவதில் அவதானம் தேவை

### அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதை நாம் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், அவற்றிற்கு நாம் நிவாரணங்களை வழங்கும் போது அவதானமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளதாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஒரு கட்டமாக அவர்களிற்கு வழங்கக்கூடிய நிவாரணங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா கூறியுள்ளார்.

சுயதேவையை பூர்த்தி செய்ய நாம் முன்னெடுக்கும் பொருளாதார திட்டங்கள் பாதிப்பினை ஏற்படுத்தாது எனும் வகையில் நிவாரணங்களை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் பிரிதிப்பாதுகாப்பு மற்றும் புத்த சாசன அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த இலக்கை அடையப்படக்கூடிய சூழல் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் களுத்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பெற்றோலிய உற்பத்தி நாடுகள் இலங்கைக்கு நிவாரணம் வழங்கும்

### நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவிப்பு

பெற்றோலியத்தை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு இலங்கைக்கு நிவாரணங்களை வழங்குமாறு தாம் விடுத்த கோரிக்கைக்கு ஒரு பக்க ஒபெக்அங்கத்துவ நாடுகள் சாதகமாகப் பதிலளித்துள்ளன என்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அண்மையில் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். ஈரானும், சவுதிஅரேபியாவும் தம்மிடமிருந்து கொள்வனவு செய்த எண்ணெய்க்கான கட்டணங்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு இலங்கைக்கு 6-12 மாதங்கள் வரையிலான மேலதிக காலப்பகுதியை வழங்கியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிவாரண அடிப்படையில் எண்ணெய்க் கொள்வனவு செய்வதற்காக மிகையான பணத்தைக கொடுக்கின்ற போதிலும் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையிலேயே எண்ணெய்விலை குறைவாகக் காணப்படுகின்றதென்றும் தெரிவித்துள்ளார்.

# பின்தங்கிய, கஷ்ரப் பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு

பின்தங்கிய மற்றும் கஷ்ரப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அடுத்தவருடம் முதல் விசேட மேலதிகக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி பின்தங்கிய பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊதியத்திற்கு மேலதிகமாக விசேட கொடுப்பனவாக 2500 ரூபா வழங்கப்படும்.

அத்துடன் கஷ்ரப்பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விசேடமாதாந்தக் கொடுப்பனவாக 1500 ரூபா வழங்கப்படும்.

இதற்கென்று அடுத்தவருடம் 366 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்குஅமைச்சரவையில் அனுமதி கிடைத்திருப்பதாகக் கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அரச ஊழியர் மகப்பேற்று விடுமுறை காலக் கட்டுப்பாடு நீக்கம்

பெண் அரசஊழியருக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேற்று விடுமுறைக்காலக்கட்டுப்பாட்டை பொது நிர்வாக அமைச்சு 3/2004 இலக்கச் சுற்றறிக்கை மூலம் நீக்கியுள்ளது.

புதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் ஒரு பெண் அரசஊழியர் எத்தனை பிரசவங்களுக்கும் மகப்பேற்று விடுமுறையை எடுக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது வரை பெண் அரச ஊழியர் ஒருவர் முதல் இரண்டு பிரசவங்களுக்கு மாத்திரமே மகப்பேற்று விடுமுறையை எடுக்கக் கூடியதாக இருந்தது. அடுத்துவரும் பிரசவங்களுக்கு மகப்பேற்று விடு முறையை அனுபவிக்க முடியாமலிருந்து வந்தது. இலங்கைத் தமிழா ஆசிரியர் சங்கம் இந்தக் கட்டுப்பாட்டை நீக்கவேண்டும்என்று வாதாடி வந்தது.

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் படி மகளிர் உரிமையை உறுதிப்படுத்துவதாகப் பொதுநிர்வாக அமைசசின் புதிய சுற்றுநிருபம் அமைந்துள்ளதாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுசெயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.ஒரு பிரசவத்துக்கு 84வேலை நாட்கள் மகப்பேற்று விடுமுறையாகத் தற்போதுவழங்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. இதனைவிட குழந்தை இறந்து பிறந்தால் அல்லது கருச்சிதைவு ஏற்பட்டால் ஆறுவாரகால விடுமுறையைப் பெண் அரசஊழியர் எடுக்கலாம் என்று சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளது. (25)

# பெண் பொலிசைக் கடத்திச்சென்ற நான்கு பேர் கொண்ட குழு

4 பேர்களைக்கொண்டகுழு கடந்த 15 ஆம் திகதி சிறிலங்கா பெண் பொலிஸ் ஒருவரைக் கடத்திச்சென்றுள்ளது.

பதுளை பொலிஸ் அதிகாரியின் காரியாலயத்தில் கடமையாற்றும் மேற்படி பெண் தனதுகடமை முடிந்து இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை பதுளபிட்டி என்னும் இடத்தில் வைத்து வானில் வந்த நான்குபேர் இவரின் கண்களையும், கைகளையும் கட்டிவிட்டுக் கடத்திச்சென்றுள்ளனர்.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள்உடனடியாக பதுளைப் பொலிஸ் நிலையத்துக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்ததையடுத்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிசார் சம்பந்தப்பட்ட வாகனத்தை மகியங்கணைப் பகுதியில் விபத்துக்குள்ளாகிய நிலையில் கைப்பற்றியதுடன் அங்கிருந்த சாரதியைக்கைது செய்தனர். சாரதியின் தகவல்களையடுத்து அங்குள்ளவன பரிபாலனத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் மேற்படி பெண் பொலிசாரை மீட்டெடுத்ததாகவும், கட்டடம் முக்கியமான ஒருவருக்குச் சொந்தமானது எனவும் தெரிவிக்கபட்டுள்ளது. மேற்படி பெண் தம்மைமணம் செய்யமறுத்ததாலேயே இந்தக் கடத்தல் நாடகம் நடைபெற்றதாக விசாரணை மூலம் கூறப்படுகிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# புலிகள், சனாதிபதியுடனான பேச்சுக்கள் குறித்து

# ரணிலுக்கு எரிக்சூல்ஹெய்ம் விளக்கம்

நோர்வேசமாதானத்தூதர் எரிக் சூல்ஹெய்ம் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் உடனடியாகப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டதாக எதிர்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தமது விஜயத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் சனாதிபதியின் தரப்பு ஆகியவற்றுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் ரணில் விக்கிரம சிங்கவுக்கு சூல்ஹெய்ம் விளக்கமளித்தார். இதன்போது ஒஸ்லோ பிரகடன அடிப்படையில் தமது கட்சி தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஆதரவு அளிப்பதாக ரணில் விக்கிரமசிங்க சூல்ஹெய்மிடம் மீண்டும் வலியுறுத்தியதாகவும், எதிர்கட்சித் தலைவர் அலுவலகத் தரப்பு தெரிவித்துள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. (32)

# தியாகதீபம் திலீபன் நினைவாக

# சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

தியாகதீபம் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் மாபெரும் மருத்துவப் பரிசோதனை முகாமை நாளை நடத்தவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் காலை 8.00மணி தொடக்கம் மாலை 1.00மணிவரை சாவகச்சேரிப் பிரதேச மக்களுக்கும், மாலை 1.00மணி தொடக்கம் 4.00மணிவரை கொடிகாமம் பிரதேச மக்களுக்கும் இம்மருத்துவபரிசோதனை இடம்பெறும். இதில் நீரிழிவு, கண்பார்வை, இரத்த அழுத்தம், வாய்ப்புற்றுநோய், ஆனைக்கால் நோய்பற்றிய ஆய்வுகள் நடைபெறவுள்ளன. (33)

# உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்தாடல்

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் நாடு திரும்பிய அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தேசிய ரீதியிலான தீர்வைக் காண்பதற்கான தொடர் கருத்தாடல்களை நடாத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மனித உரிமைகள் ஆர்வலரான கலாநிதி மரியோ கோமஸ் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கை ஒன்றின் அடிப்படையில் பொதுவான கோட்பாடுகளை வரையறுத்துக்கொள்வதை நோக்கமாகக் கொண்டே இக் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றன.

இதன்ஓர் அங்கமாக எதிர் வரும் 20ஆம் திகதி யாழ். அரச அதிபரது மாநாட்டு மண்டபத்தில் கருத்தாடல் நிகழ்வு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

அறிமுக உரையினை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் ஆற்ற அறிக்கையினைச் சமர்ப்பித்து விளக்கவுரையினை கலாநிதி மரியகோமஸ் ஆற்றவிருக்கின்றார்.

அவரது ஆய்வறிக்கை தொடர்பான பிரதிநிதிகளது கருத்துக்களும் இக் கருத்தாடலில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை அனைத்து மட்டங்களிலிருந்தும் பெறப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் இறுதியாக பூர்த்தி செய்யப்படும் ஆய்வறிக்கையினை, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான தனது பூர்வாங்க அறிக்கையாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (27)

# யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு

# மாவை தலைமையில் நேற்றுகூடியது

யாழ். தேர்தல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நேற்றைய கூட்டம் இடம்பெற்றிருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட, பாராளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், ந.ரவிராஜ், சி.சிவநேசன், க. சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் க.ஈழவேந்தன் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டாம் நாளான இன்று இடம்பெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மக்களிற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்குவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களது நிதியினைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரியவருகின்றது. (32,27)

## கட்டு நாயக்கவூடாக

# விமானம் மூலம் சட்ட விரோதமாக

# இங்கிலாந்து செல்ல முயன்றோர் கைது

விமானம் மூலம் சட்ட விரோதமாக இங்கிலாந்துக்குச் செல்ல முயன்ற 31பேரை கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுக் கைது செய்யப்பட்ட 31பேரில் 26 பேர் தமிழ் இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாலைதீவுக்குச் செல்வதாகக் கூறிய இவர்கள் இங்கிலாந்திற்குச் செல்ல முற்பட்டுள்ளனர். இவர்கள் கைதுசெய்யப்பட்ட பின்னர் பல்வேறு தகவல்கள் தெரிய வந்துள்ளதாகக் குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவர்களில் 13 பேர் ஆண்களாவர். 12 பேர்பெண்களும் 6சிறுவர்களும் இதில் அடங்குகின்றனர். மாலைதீவுக்கு செல்வதற்கான வானூர்தி அனுமதிச் சீட்டுக்களை வைத்திருந்த அவர்கள் பிரித்தானியா செல்லும் வானூர்தியில் சென்று அமர்ந்திருந்த தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை 7.30இற்கே இவர்கள் புறப்பட வேண்டிய மாலைதீவுக்கான யு.எல். 101 இலக்க சிறிலங்கா வானூர்தியின் கால அட்டவணை குறிப்பிடப்பட்டிருந்தும் எனினும் இந்த 31 பேரும் காலை 6.45 இற்கே சிறிலங்கா வானூர்தி சேவையின் யு.எல். 105 ஆம் இலக்க வானூர்தியில் ஏறி அமர்ந்திருந்தனர். இந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

இதேவேளை இவ்வாறு நெடுநாளாக சட்டவிரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவரும தகவலும் தற்சமயம் வெளியாகியுள்ளது. (32)

## புதிய அமைச்சர் பதவி

அரசாங்கத்தின் புதிய அமைச்சராக சி.பி.ரட்நாயக்க நேற்று பதவியேற்றுள்ளார்

மத்திய மற்றும் சிறு கிராமிய அபிவிருத்தி மனித வள அமைச்சராக அவர் பொறுப்பேற்றுள்ளார்.

அண்மையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் இணைந்து கொண்டமை காரணமாக தாம் வகித்து வந்த தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை விட்டுக்கொடுத்த சி.பி.ரட்நாயக்கவின் புதிய அமைச்சில் தோட்டத் துறையின் பல விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் இளைஞர் ஊக்குவிப்பு என்ற அம்சமும் அடங்கியுள்ளது. (32)

## -கிளி. மருத்துவமனைக்கு முன்பாக

# கன்டர் வாகனம் மோதியதில்


# முச்சக்கரவண்டி தடம் புரண்டது

(அலுவலக செய்தியாளர்)

முச்சக்கர வண்டியினை கன்டர் வாகனம் மோதியதில் முச்சக்கர வண்டி தேசமடைந்தது.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக ஏ.9வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருகையில்; தருமபுரம் வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சை பெறும் பொருட்டு கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு நோயாளியை ஏற்றி வந்த முச்சக்கரவண்டி மாவட்ட வைத்தியசாலைக்குத் திரும்புவதற்கு எத்தனிக்கையில் பின்னால் வேகமாகவந்த கன்டர் வாகனம் மோதியதில் முச்சக்கரவண்டி, சென்ற பாதையை விட்டு நடு வீதிக்கு திரும்பி குடை சாய்ந்தது. உடன் அருகில் நின்றவர்



களால் முச்சக்கரவண்டி நிமிர்த்தப்பட்டதுடன் வண்டிக்குள் இருந்த மேற்படி நோயாளர்கள் காப்பாற்றப்பட்டு கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஸ்தலத்திற்கு விரைந்த தமிழீழ வீதிப்போக்குவரத்து காவல்துறையினர் விபத்துக் குறித்து விசாரணை மேற்கொண்டதுடன் இரு வாகனங்களையும் காவல் பணிமனைக்கு எடுத்துச்சென்று மேலதிக விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (சோ)

# குவைத்தில் நிர்க்கதியாகியிருந்த

# 36 பெண்கள் திரும்பினர்

குவைத்தில் நிர்க்கதியாகியிருந்த 36 வீட்டுப்பணிப் பெண்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களினால் பல துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தாம் அனுபவித்த துன்பங்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களே காரணம் எனக் குற்றம் சாட்டியுள்ளனர். குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் இத்தகைய மோசடிகளைத்தடுத்து நிறுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லையென நாடுதிரும்பிய இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் விசனம்தெரிவித்தனர். (32)

## சிறிலங்கா...

படைகளுடன் வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருடன் இணைந்து செயற்படுதை கொழும்பின் அரசாங்கம் தடுக்க வேண்டும் எனவும் எரிக் சூல்ஹெய்ம் கருத்துரைத்துள்ளார். (32)

## தென்னிலங்கை...

அளித்ததுடன், மக்களின் அபிலாசைகளையே புலிகளின் கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், யாழ். குடாநாட்டு மக்களுக்கு இயல்பு வாழ்வு மீள் குடியமர்வு என்பன மிக அவசிய மானதெனவும் இளம்பரிதி மேலும் தெரிவித்தார். (33)

## வரவுசெலவு...

அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி சமர்பிக்கப் படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

## நாடு...

அபிலாசைகளை உள்ளடக்கி விடு தலைப்புலிகளால் முன்வைக்கப் பட்டுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது தனித் தமிழீழம் அமைய வழிவகுக்கும் என ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகள் சிங்கள மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்பி வருகிறார்கள்.

சிங்கள மக்களைக்குழப்பி அரசியல் சுயலாபம் தேடும் பேரினவாதக்கட்சிகளுக்கு சில பேரினவாத ஊடகங்கள் பக்கபலமாகச் செயற்படுகின்றன.

இந்நிலை தொடர்ந்தால் சமாதான முன்னெடுப்புகள் குழம்பி மீண்டும் ஓர்யுத்தம் வெடிக்கும். இதனால் நாடு இரண்டாகப் பிளவடையும் நிலை உருவாகும் எனவும் இவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர். (33)

## புலிகள்...

நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் அகதி களுக்கான ஐக்கிய நாடுகள் நிதி யத்தின் ஆலேசகர்களான ஜோய் கீன் மற்றும் பேராசிரியர் ஆர்ஜுனா பராக்கிரம மற்றும் சட்ட ஆலோசகரான சணாக்க சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் சார்பில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் தலைவர் வி.சிறிசக்திவேல் மகளிர் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த திருமதி சரோஜா சிவச்சந்திரன், கியூடெக் அமைப்பின் பணிப்பாளர் வணபிதா, சி.ஜெயக்குமார் அடிகளார், வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்களின் தலைவர் சு. பரமநாதன் மற்றும் நீதிக்கும், சமாதனத்திற்குமான நல்லெண்ணக்குழுவைச் சேர்ந்த வணபிதா ஏ.ஜே.பேர்னாட் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான சமாதானச் சூழலை மக்களது நிலை குடாநாட்டில் மனித உரிமைகளைப் பேணுவதற்கான முன்னெடுப்புக்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டை விரிவுபடுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பாக இச் சந்திப்பில் ஆராயப்பட்டிருந்தது. (27)

## மட்டு...

கடந்த மாத இறுதியில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் டொன் புறூவ் ஹொவ்டே மட்டக்களப்பு சென்று விடுதலைப் புலிகளுடனும், இராணுவத்தினருடனும் [illegible]ரித் தனியாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளையடுத்து இந்தச் ச[illegible]திப்புக்களின் தொடர் இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் திகதியும் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இரண்டு தடவைகள் அவை ஒத்தி வைக்கப்பட்டன. இந்த சந்திப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கேட்டுக் கொன்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதனையடுத்து எதிர்வரும் புதன்கிழமை இந்தச் சந்திப்பு வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கின்றது. இதனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரொப் ஹொக்லன்ட் உறுதிப்படுத்தினார்.

## வீரவணக்கக்...

இடம்பெற்றது. பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர். வீரவணக்க உரைகளை பண்டிதர் இராஜகுரு யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் ஆற்றினர். அதனைத் தொடர்ந்து இம் மாவீரரது வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டு பி.பகல் 1.00 மணிக்கு புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.